# தீபகச் சுடர்

ஜூலை 2025
தீபம் 14 சுடர் 2

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



## என் ஆண்டவரே! என் கடவுளே!!

# தீபகத்திலிருந்து இறையாசீர்



**அன்பான தீபகச் சுடர் வாசகர்களே,**

## 'என் ஆண்டவரே! என் கடவுளே!!"

ஜூலை மாதம் என்பது சலேசியர்களின் சிறப்பு மாதம். கடல் வழியாக துணிச்சலான பயணம் செய்து நம்பிக்கையை இந்தியாவிற்கு கொண்டு வந்த எங்கள் புரவலர் புனித தோமாவை நினைவு கூறும் மாதம். நம் திருத்தூதர் தோமாவிடமிருந்து நமது மறைக்கல்வி ஆசிரியர் மற்றும் இளம் நம்பிக்கையாளர்கள் ஆழ்ந்த உத்வேகத்தை பெறமுடியும்.

புனித தோமையார் பெரும்பாலும் 'சந்தேக தாமஸ்" என்று நினைவுகூரப்படுகிறார். ஆயினும் அவரது வரலாறு பலவீனம் அல்ல. ஆனால் உண்மைக்கான ஆழமான. நேர்மையான தேடல். இவர் உயிர்த்த இயேசுவின் காயங்களைத் தொட்டு, 'என் ஆண்டவரே, என் கடவுளே" என்று அறிக்கையிட்டார். (யோவான் 20:28). இவருடைய சந்தேகம் நிறைந்த நற்செய்தி நிகழ்ச்சிகள் மிக சக்திவாய்ந்த அறிவிப்புகளில் ஒன்றாக மாறியது. மறைப்பணியாளர்களாக புனித தோமாவின் வாழ்க்கையை வெறும் வகுப்பிற்காக பயன்படுத்தாமல், நம் இளைஞர்களின் இதயங்களை வளப்படுத்த பயன்படுத்துவோம். நமது இளைஞர்களுக்கு புனித தோமையாரின் திருப்பயணம் மிகவும் மதிப்புமிக்க பாடமாக விளங்குகிறது.

இன்றைய இளைஞர்கள் அடையாளம், உண்மை, துன்பம் மற்றும் நோக்கம் பற்றிய கேள்விகளின் உலகில் வாழ்கின்றனர். சந்தேகம் என்பது ஒரு பாவமல்ல, அது ஒரு அழைப்பு என்று புனித தோமா வெளிப்படுத்துகின்றார். கேள்விகளை கேட்பது என்பது இளைஞர்கள் குறையாக எண்ணாமல் அதை தன் வளர்ச்சிக்காக பயன்படுத்த வேண்டும். புனித தோமாவே நீங்கள் தனியாக இல்லை நாங்களும் உங்களோடு பயணிக்கின்றோம், என்று உறுதியளிப்போம். 'தோமா நீ தனியாக இல்லை, உங்கள் கேள்விகளையும், நீங்கள் தனிப்பட்ட முறையில் வெளிப்படுத்த விரும்புவதையும் நான் வரவேற்கிறேன்" என்று இயேசு அவரின் கேள்விகளை வரவேற்கிறார்.

புனித தோமையாரை புரிந்துக்கொள்வதற்கு மனித அறிவினால் மட்டும் சிந்தித்தல் முடியாது. மாறாக தூய ஆவியின் கருணையும், சக்தியும் நமக்குத் தேவை. தூய ஆவியானவர் உலகின் ஒவ்வொரு மாற்றத்திற்கு பின்னாலும் இருந்து செயல்படுகின்ற ஒரு மாபெரும் சக்தி. மறைப்பணியாளர்கள், நற்செய்தி அறிவிப்பவர்கள், இளைஞர்கள் அனைவரும் நம் வாழ்வில் தூய ஆவியின் பங்கை புரிந்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால், **குழப்பங்கள் நிறைந்து சோர்ந்து போகும் இதயங்களை அவர் ஆறுதல்படுத்துகின்றார். கிறிஸ்துவை அடையாளம் காண மனதை அவர் அறிவூட்டுகிறார். கடவுளின் அழைப்பிற்கு 'ஆம்" என்று சொல்லும் மனவுறுதியை அவர் அளிக்கின்றார்.**

நம்பிக்கை வெறுமனே படித்து கற்றுக்கொள்ளப்படுவது கிடையாது. அது அனுபவத்தின் மூலம் நம்மை ஆட்கொள்ள வேண்டும். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை புனித தோமா சந்தித்தது போல. ஒவ்வொரு இளைஞனும் இயேசுவின் தனிப்பட்ட அனுபத்தைப் பெற நாம் உதவவேண்டும்.

சந்தேகம் தோல்வியல்ல என்பதை புனித தோமையார் நமக்குக் கற்பிக்கிறார். குறை கூறுவதற்கும், மற்றவர்களை அவமானப்படுத்துவதற்காகவும் இல்லாமல் நேர்மையுடன் அணுகினால், அது புதிய பலவழிகளை உருவாக்க வழிவகுக்கும். கேள்வி கேட்க தயங்காத, அதேநேரத்தில் பயணம் செய்யவும், இறைவேண்டல் செய்யவும், இறைவனை சந்திக்கவும் தயாராய் இருக்கும் நல்ல இளைஞர்களை உருவாக்குவோம்.

எங்கள் புரவலரைக் கொண்டாடுவதில், நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். கேள்விகளிலிருந்து நம்பிக்கைக்கும், நிச்சயமற்ற தன்மையிலிருந்து அசைக்க முடியாத நம்பிக்கைக்கும், சந்தேகத்திலிருந்து பக்திக்கு பிறரை வழிகாட்டவும், உறுதியான முடிவுகளை எடுக்கும் நல்ல சமுதாயத்தை உருவாக்கவும் முயல்வோம்.

என்றும் அன்புடன்
அருட்பணி. **ஜேசுதாஸ்** ச.ச
இயக்குநர் - தீபகம்

## பகுதி 1 : வழிபாட்டு வழிகாட்டி


03.07.2025 புனித தோமா இந்தியாவின் திருத்தூதர் பெருவிழா - திருப்பலி 02

06.07.2025 பொதுக்காலம் 14ம் ஞாயிறு - திருப்பலி 03

07.07.2025 அருளாளர் மரிய ரொமேரோ மெனேசிஸ் - திருப்பலி 05

11.07.2025 புனித பெனடிக்ட் - திருப்பலி 06

13.07.2025 பொதுக்காலம் 15ம் ஞாயிறு - திருப்பலி - திருப்பலி 07

16.07.2025 புனித கார்மேல் அன்னை - திருப்பலி 08

20.07.2025 பொதுக்காலம் 16ம் ஞாயிறு - திருப்பலி 09

22.07.2025 புனித மகதலா மரியா விழா - திருப்பலி 11

25.07.2025 புனித யாக்கோபு : திருத்தூதர் விழா - திருப்பலி 12

26.07.2025 புனிதர்கள் சுவக்கின் அன்னம்மாள் - திருப்பலி 13

27.07.2025 பொதுக்காலம் 17ம் ஞாயிறு - திருப்பலி - திருப்பலி 14

28.07.2025 புனித அல்போன்சா முட்டத்துப்படத்து - திருப்பலி 16

29.07.2025 புனிதர்கள் மார்த்தா, மரியா, லாசர் - திருப்பலி 17

31.07.2025 லொயோலா நகர்ப் புனித இஞ்ஞாசியார் - திருப்பலி 18


## பகுதி 2 : நம்பிக்கையில் வளர...


சென்னை சலேசிய சபையும் புனித தோமாவும் 19

மரியாளின் வாழ்வில் தூய சுவக்கின் அன்னம்மாள் 21

புனித இஞ்ஞாசியார் - வாழ்வு தரும் பாடம் 24

திருஅவைச் செய்திகள் 26

## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

## 03.07.2025 தோமா இந்தியாவின் திருத்தூதர் பெருவிழா திருப்பலி

**முன்னுரை**

திரு. விக்டர்

I. எசா. 52: 7-10 II. எபே. 2: 19-22 லூக். 20: 24-29

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பன்னிரு திருத் தூதர்களில் ஒருவர் புனித தோமா ஆவார். துணிவுமிக்கவர், இயேசுவுக்காக தன்னையே இழக்கவும் துணிந்தவர். ஒருமுறை யூதேயாவில் உள்ள யூதர்கள் இயேசுவின்மீது கல்லெறிய முயன்றனர். ஆனால் இயேசுவின் உறவினராக இலாசர் மரித்த நிலையில் இயேசு அங்கு மறுபடியும் செல்ல நினைக்கையில் மற்ற சீடர்கள் அங்கு செல்ல வேண்டாம் என்று மறுத்தனர், இயேசுவைத் தடுத்தனர். ஆனால் தூய தோமாவோ "அவரோடு செல்வோம், அவரோடு இறப்போம்" (யோவா 11: 16) என்று கூறி தனது துணிவை வெளிப்படுத்தினார். அந்தத் துணிவுதான் அவரை இந்தியாவில் நற்செய்தி அறிவிக்க அழைத்து வந்தது. இயேசு உயிர்த்த நிகழ்வை மற்ற சீடர்கள் தோமாவிடம் கூறியபொழுது அவர் நம்பவில்லை. என் கண்களால் காணதவரை நம்பமாட்டேன் என்றார். இதனால் இயேசு மீண்டும் தோமாவும் இருக்கின்றபொழுது காட்சியளித்து "கண்ணால் காண்பதைவிட காணாமலே நம்புகிறவர்கள் பேறுபெற்றோர்" என்றார் (யோவா 20: 22). தோமாவோ தனது தவறை உணர்ந்தவராய் "நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்" என்றார் (யோவா 20: 28) புகழ்பெற்ற இந்த வார்த்தைகள் அவரது கல்லறையில் பொறிக்கப்பட்டுள்ளது.

கி.பி. 52ல் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் வழியாக இந்தியா வந்த தூய தோமா அவர்கள் முதன் முதலில் கேரளத்தில்தான் பணியாற்றினார். அவர்மூலம் திருமுழுக்குப் பெற்றவர் "தோமா கிறிஸ்தவர்கள்" என்று இன்றும் அழைக்கப்படுகின்றனர். கி.பி. 59ல் சென்னை மயிலைப் பகுதியில் நற்செய்தி அறிவித்த தோமா அவர்கள் கி.பி. 72ம் ஆண்டு புனித தோமையார் மலை என்று சொல்லப்படுகின்ற மலையில் செபித்துக்கொண்டு இருந்தபோது ஈட்டியால் குத்தி கொலை செய்யப்படுகின்றார். சைதாப்பேட்டை சின்னமலையில் அவர் தங்கியிருந்து பணிசெய்ததற்கான அடையாளங்கள் உண்டு. அவரது கல்லறை சென்னை மயிலையில் உள்ள புனித தோமையார் தேசிய திருத்தல ஆலயத்தின்கீழ் உள்ளது. அழகிய அந்த சிற்றாலயத்தில் அமர்ந்து தியானம் செய்வது சிறந்த அனுபவமாகும். புனிதரின் திருவிழாவை ஜூலை3ம் நாள் சிறப்பிக்கின்றோம். தூய தோமா அவர்கள் இந்தியாவின் பாதுகாவலர் என்று அழைக்கப்படுகின்றார். இத்தகைய சிறப்பு பெற்ற தூய தோமாவின் திருவிழாவைச் சிறப்பிக்கும் நாம் அவரது துணிவு, நம்பிக்கை, பாடுகளை ஏற்கும் மனப்பக்குவம் பெற்று நற்சாட்சியுள்ள கிறிஸ்தவ வாழ்வு வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவிகள் யாவரையும் ஆளுகை செய்யும் "இயேசுவோடு செல்வோம், இயேசுவோடு மரிப்போம்" என்று முழங்கிய தோமாவைப்போல இயேசுவோடு உடனிருப்பவர்களாக பணி வாழ்வில் உண்மையுள்ளவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. வளம் தரும் வள்ளலே இறைவா, நாங்கள் வாழும் இவ்வுலகத்தில் உள்ள இயற்கை வளங்கள் அழியாமலும், நாட்டில் நிலவும் வறட்சி நீங்கி நல்ல மழையைத் தந்து மக்களின் துயர் துடைக்கவும், செழிப்பான விவசாயம் காணவும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. நம்பிக்கையின் துவக்கமும் முடிவுமானவரே, புனித தோமாவைப் போல இயேசுவின்மீது உண்மையான அன்புள்ளவர்களாகவும், வாருங்கள் அவரோடு இறப்போம் என்று முழங்கிய தோமாவைப்போல துணிவுமிக்கவராய் நற்செய்திக்காய் சான்று பகர்ந்து வாழ்ந்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
4. எளியவர் எம்மை வழிநடத்தும் தந்தையே, இன்று இத்திருப்பலிக்கு வந்திருக்கும் ஒவ்வொருவரையும் ஆசீர்வதியும். இவர்களது இதய விருப்பங்களை நிறைவேற்றியருளும். இவர்களது எண்ணங்களை, ஏக்கங்களை, எதிர்ப்பார்ப்புகளை நிறைவேற்றி வளமையான, மகிழ்வான வாழ்வை இவர்களுக்கு வழங்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 06.07.2025 பொதுக்காலம் 14ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. எசா. 66: 10-14 II. கலா. 6: 14-18 லூக். 10: 1-12,17-20

எந்த வீட்டிற்கு சென்றாலும் அங்கு "அமைதி உண்டாகுக" என்று வாழ்ந்த பணிக்கிறார் இயேசு கிறிஸ்து. அமைதியாக வாழவேண்டுமென்று ஆண்டவரின் இல்லத்திற்கு அவரது பலியில் கலந்துக்கொள்ள வந்திருக்கும் நம்பிக்கையாளர்களான உங்களை செபத்துடன் வாழ்த்துகிறோம். முதல் வாசகத்தில் தாய் தன் பிள்ளையை மார்பில் அனைத்து சுமப்பதும், மடியில் வைத்து தாலாட்டுவதும் பிள்ளையைத் தேற்றுவதும்போல நான் உங்களைத் தேற்றுவேன் என்கிறார் ஆண்டவர். ஆதனால் உங்கள் இதயம் மகிழ்ச்சிஅடையம் என்கிறார். இரண்டாம் வாசகத்தில் இயேசுவின் சிலுவையை அன்றி வேறெதிலும் பெருமைப்பாராட்டமாட்டேன் என்கிறார் புனித பவுல். சிலுவை மீட்பின் சின்னம், நம்பிக்கையின் சின்னம், வாழ்வு தரும் சின்னம் என்பது குறித்து தியானிப்போம்.

நற்செய்தியில் நாம் அனைவரும் நினைப்பதுபோல ஊழியர்கள் என்றால் குருக்களும், அருட்சகோதரிகளும் துறவறத்தாரும் மட்டுமே என்றல்ல, திருமுழுக்குப் பெற்ற நாம் ஒவ்வொருவரும் இறைவனின் ஊழியர்களே, உயிர்த்த ஆண்டவரை முதன் முதலில் சந்தித்த மகதலேன் மரியாவிடம் "நீ போய் என் சீடர்களுக்கு இதைப்பற்றிக் கூறு" என்று அவரை இயேசு கிறிஸ்து அனுப்புகிறார். அடுத்து சீடர்களை அனுப்புகிறார், சவுலை பவுலாக மாற்ற நற்செய்தி அறிவிக்க அனுப்புகிறார். இயேசு கிறிஸ்து தந்தையாம் இறைவன்மூலம் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்டவர். கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் புதிய சமூகம் அமைக்க அழைக்கப்பட்டுள்ளோம். சீடர்களை இயேசு அனுப்பும்போது "அமைதி" என்ற ஒரே ஒரு செய்தியை எடுத்துரைக்கச் சொல்கிறார். கிறிஸ்து விண்ணகம் செல்வதற்கு முன் இறுதியாக வழங்கிய கொடை "அமைதியே" முதலில் நமது உள்ளத்தில், இல்லத்தில், குடும்பங்களில், பங்கில், நாட்டில் "அமைதி" வெளிப்பட பாடுபடுவோம், நம் மனதைப் பக்குவப்படுத்துவோம், பகைமையுள்ள இடத்தில், அமைதியம், கலக்கமுள்ள இடத்தில் தெளிவையும், கோபமுள்ள இடத்தில் சந்தோஷத்தையும் நம் ஒவ்வொருவருக்கும் அருள வேண்டி இத்திருப்பலியில் பக்தியோடு பங்குபெறுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. உமது ஆட்சியின் பணியாளர்களை எமக்கு அனுப்பிய இறைவா, அனைத்து நற்பண்புகளும், நிறைந்த உமது இறையாட்சி எல்லா இடங்களிலும் நிலைபெற வேண்டுமென்றும், எங்கள் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் திருநிலையினர் அனைவரும் உமது கற்பித்தலின்படி செயல்பட்டு, மக்கள் அனைவரும் ஒரேக் குடும்பமாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. வலுவின்மையை உமது வல்லமையால் நிரப்புபவரே எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்கள், அதிகாரிகள் தங்கள் வலுவின்மையால் நாட்டினை வளர்ச்சிப்பாதையில் வழிநடத்திச்செல்லும் ஆற்றலை அவர்களுக்கு அளித்து நாட்டையும் மக்களையும் பாதுகாத்து வழிநடத்தும் வல்லமையை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. தாய் தன் பிள்ளையைத் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன் என்றவரே, வாழ்வில் ஆதரவற்று, துணையின்றி, ஆறுதலின்றி தவிக்கும் மாந்தர்களை நீர் கண்ணோக்கும். அவர்களுக்கு நீரே உடனிருந்து ஆறுதலித்து, ஊக்கப்படுத்தி நல்வழியில் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. அறுவடையின் உரிமையாளரே, தேவ அழைத்தல் பெருகவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம். இளைஞர்கள் தூய ஆவியின் தூண்டுதலால்

உம் பிள்ளைகளாக வாழ குருக்களாக, அருட்சகோதரிகளாக தானே முன்வந்து உமக்கேற்ற பாதையில் நடந்திட தேவையான நற்சிந்தனையை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 07.07.2025 அருளாளர் மரிய ரொமேரோ மெனேஸஸ் திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் சுரேஷ்

மரிய ரொமேரோ மெனேஸஸ் 1902ம் ஆண்டு சனவரி 13ம் நாள் மத்திய அமெரிக்காவில் நிக்கராகுவா நாட்டில் மெர்சேடஸ் நர்ட்பேசா, அன்னா மெனேஸஸ் என்னும் தம்பதியர்களுக்கு அன்புப் புதல்வியாக பிறந்தார். தமது 12ம் வயதில் சலேசிய கன்னியர்கள் நடத்திய பள்ளியில் சேர்ந்து கல்வி கற்றார். "மரியாளின் குழந்தைகள்" (Children of Mary) என்று அழைக்கப்பட்ட பக்த சபையில் உறுப்பினராகி இயேசுவை அரசராகவும், மரியன்னையை அரசியாகவும் தம் வாழ்வில் கொண்டார். 1919ம் ஆண்டு சான்சால்வதாரில் சலேசிய கன்னியர் சபையில் சேர்ந்தார். புறநகர்ப் பகுதியில் வறுமையில் வாடிய ஏழைகளுக்கும் வீதியில் வாழ்ந்த மக்களுக்கும் ஆசிரியையாகவும், திருத்தூதுவராகவும் விளங்கினார். ஆரட்டரிகளை உருவாக்கி சிறுவர் சிறுமியர் உணவு, உடை மற்றும் கல்வி பெற வசதி செய்தார்.

"சகாய அன்னையின் கோட்டை" என்ற பெயரில் வீட்டுவசதித் திட்டங்களை உபகாரிகளின் தாராள உதவியுடன் ஏழைகளுக்குச் செய்துக் கொடுத்தார். நம்பிக்கையில் உறுதியும், பணியில் தெளிவும், வாழ்வில் ஒளிவு மறைவற்ற தன்மையும் பெற்றிருந்தார். ஆசிரியராக, மறைக்கல்வி பயிற்றுவிப்பவராக, கலைஞராக, மருத்துவ தாதியாக, குழந்தைகளுக்கு நல்லதொரு தாயாக, ஏழைகளுக்கு புகலிடமாக, அடைக்கலமாக விளங்கிய இவர் இயேசு மரியின் பக்தியை எல்லா இடங்களிலும் பரப்பி 1977ம் ஆண்டு ஜூலை 7ம் நாள் மாரடைப்பின் காரணமாக இயற்கை எய்தினார். திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இவரை 2002ம் ஆண்டு ஏப்ரல் 14ம் நாள் அருளாளர் நிலைக்கு உயர்த்தினார். இவர் தான் மத்திய அமெரிக்காவிலே முதல் முறையாக அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டவர். இவரின் வாழ்வைப் பின்பற்றி நாமும் இறைவனுக்கேற்ற பிள்ளைகளாக வாழ இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. முழு முதல் தலைவனே இறைவா, எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரும் தங்களின் வாழ்வில் அருட்சகோதரி ரொமேரோ மெனேஸசைப்போல இறைப்பக்தியை எல்லா இடங்களிலும் பரப்பத் தேவையான அருளைத் தந்தருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. படைப்பின் தலைவனே எம் இறைவா, "பகிர்ந்து வாழாத தன்மை ஒரு கொலையே" என்ற அருளாளர் ரொமேரோ மெனேஸசின்

வார்த்தைக்கேற்ப நாங்கள் அனைவரும் எங்களிடம் உள்ள வளங்கள், ஆற்றல், சக்தி, நேரம், திறமைகள் ஆகியவற்றைப் பிறரோடு பகிர்ந்து வாழத் தேவையான வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா, அருளாளர் ரொமேரோ மெனேஸ சைப்போல நாங்கள் ஒவ்வொருவரும் நம்பிக்கையில் உறுதியும், பணியில் தெளிவும், ஒளிவு மறைவற்ற தன்மையும் பெற்று எளிய மனத்தோராகிய ஏழை எளிய மக்களை நாங்கள் அன்பு செய்து, அவர்களின் உடல் உள்ளத் தேவைகளில் உடனிருந்து, அவர்களின் சிரிப்பில் உம்மைக் காணும் அருளினைத் தந்தருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 11.07.2025 புனித பெனடிக்ட் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. டிலைலா சேவியர்

இறையேசுவில் பிரியமானவர்களே, இறைவார்த்தையே வாழ்வு, வாழ்வே இறைவார்த்தையென வாழ்ந்தவர்கள் சிலரே. இந்த வரிசையில் வாழ்ந்தவர் நம் புனிதர் பெனடிக்ட். வீணான சடங்குகள், வெளியடையாள வேடங்களின்றி சிறிய செயலானாலும் உண்மையாக இருக்க வேண்டும் என வாழ்ந்தவர்தான் இன்றைய புனிதர். புனித ஸ்கொலாஸ்திகாவின் சகோதரர் இவர். உயர்ந்த குலத்தில் தோன்றியதால் புகழ்பெற்ற உரோமைக்கு கல்வி கற்க பெற்றோரால் அனுப்பப்பட்டார். அங்கு இளைஞர் மத்தியிலிருந்த தீச்செயல்கள் இவரை பதை பதைக்கச் செய்து, உரோமையைவிட்டு வெளியேறினார். இறைவனுக்கு தன்னை அர்ப்பணிக்க திட்டமிட்டு மலை உச்சிக்குச் சென்று எர்மானுசு என்ற தவமுனிவரை சந்தித்து அவர் காட்டிய வழியில் தவ வாழ்க்கை மேற்கொண்டு மக்கள் பலரை தன்பால் ஈர்த்தார். இதன் விளைவாக தோன்றியதே "பெனடிக்ட் துறவற சபை".

கி.பி. 1964ல் திருத்தந்தை 6ம் சின்னப்பர் இவரை ஐரோப்பிய நாடுகளின் சிறப்பு பாதுகாவலர் என அறிவித்தார். துறவு வாழ்வுப்பற்றி இவர் எழுதிய துறவற வாழ்வின் ஒழுங்கு நூல் உறுதுணையாக இருந்ததுபோல் வேறு எந்த நூலும் அந்நாளில் அமையவில்லை. அதனால் 12ம் பத்திநாதர் இவருக்கு ஐரோப்பாவின் தந்தை என்ற பட்டம் சூட்டினார். திருப்பலியில் திருவுணவு பெற்று செபிக்கும்போதே உயிர் பிரிந்தது. (புனிதர்களின் வரலாறு புத்தகம்) இவரது திருநாளை சிறப்பிக்கும் நாமும் இவரைப்போல தியாக வாழ்வு வாழ இத்திருப்பலியில் இணைந்து மன்றாடுவோம். 2தெச.7:7-12ல் சோம்பித்திரியாமல் பிறருக்கு சுமையாக இராமல், துன்பம் விளைவிக்காமல், உழைத்து உண்ணவும் அறிவுறுத்துகிறது இவ்வருள்வாக்கு. இன்றைய அருள் வாக்குகளும், நற்செய்தியும் நமக்கு சொல்வதை மனதில் இருத்தி இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, அனைத்திலும் ஞானத்தோடு நடந்து கொள்ளவும் கிறிஸ்துவோடு மாறாத நட்பும் எவராலும் பிரிக்க முடியாத அன்பும், கூட்டு வாழ்வும் வாழ அழைக்கப்பட்ட எம் ஞான மேய்ப்பர்களை ஆசிர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. புனிதமான இறைவா, இன்றைய விழா நாயகர் புனித பெனடிக்ட் போல துறவற வாழ்வு வாழ்பவர்களுக்கு இறைமக்களாகிய நாங்கள் குடும்பத்தோடு செபிக்கும் செபத்தில் அவர்களுக்காக மன்றாடவும், அவர்களின் தேவைகளை சந்திக்க பொருளுதவிகள் செய்யும் தாராள மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. கருணை வள்ளலே இறைவா, பள்ளிகள் திறந்திருக்கும் இந்நேரத்தில் பிள்ளைகளின் அநேக தேவைகளை பெற்றோர்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பில் இருக்கின்றார்கள். இவர்களின் தேவைகளை சந்தித்து தேவையான பொருளாதார உதவிகள் கிடைக்க நீர் உதவிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 13.07.2025 பொதுக்காலம் 15ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிவில்சன்

I. இச. 30: 10-14 II. கொலோ. 1: 15-20 லூக். 10: 25-37

பொதுக் காலம் 15 ம் ஞாயிறு திருப்பலியை அன்பு நிறைந்த இறை மக்களாகிய நாம் கொண்டாடி மகிழ கூடியுள்ளோம். ஒன்றை ஏற்க கடைபிடிக்க செயல்படுத்த முதலில் நாம் செய்ய வேண்டியது. அதனை முழுமையாய் அறிய வேண்டும். ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். கடுகளவும் பிசகாமல் உடல் பொருள் ஆவி அனைத்தையும் நிறைவாய் அர்ப்பணித்து செய்து முடிக்க வேண்டும். இதைத்தான் இறைஇயேசு இன்றைய இறைவார்த்தை மூலம் மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறார். "செவி கொடு" என்கிறார். அறிந்து ஏற்க, புரியாதது அல்ல என்கிறார். ஆய்விற்கு உட்படுத்தி தெளிவு பெற, உன் இதயத்தில் உள்ளது என்கிறார். முழுமையாக நிறைவாக உலகம் முழுவதும் அமைதி குடி கொள்ள வேண்டும். அதனை நிலை நாட்டவே இறை திருவுளம் நம்மை இயக்குகிறது.

ஆனால் இன்று எங்கும் அமைதியில்லை, நிம்மதியில்லை, ஒற்றுமை சமாதானம் இல்லை. போர் அபாயம், சமய சாதி இன மொழிகளை வைத்து பிரித்தாளும் சூழ்ச்சிகள் ஒருபுறம், காலங்காலமாக நமது நாட்டிற்கு தேவையான அரசியல் அமைப்பு சட்டங்களை திருத்தி, தேவையில்லா சில சட்டங்களை புகுத்தி மக்களுக்கு நெருக்கடி கொடுத்து சிக்கல்கள் தந்து சமமான உரிமைகளை பறித்து மனிதத்தை சிதைத்து சுய லாபம் பெற என சில கூட்டங்கள் அலைகின்றன. அதற்குத்தான் தேவையில் உழல்வோர் இன்று அதிகம் உள்ளனர் . அவர்களுக்கு உதவ வேண்டுவது குறிப்பாக

திருமுழுக்கு பெற்ற இறை மக்களாகிய நமக்குத் தான் உள்ளது. இதனை உணர்ந்து இனி ஒருபோதும் எவரையும் காயப்படுத்தாமல் காயம்பட்டவரை குணப்படுத்தவும் இறைவன் நம்மை அழைத்து உள்ளார். ஏற்போம், செவிமடுப்போம் , முழுமையாய் நிறைவாய் அர்ப்பணித்து செயல்பட இத்திருப்பலியில் இணைந்து வேண்டுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பின் ஊற்றாகிய இறைவா, எங்களைப் பாவத்திலிருந்து மீட்டு பரிசுத்தமாக்கியவரே, உம்மால் தேர்ந்துக்கொள்ளப்பட்ட கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் திருநிலையினர் அனைவரையும் நீர் ஆசீர்வதியும். இவர்கள் இவ்வுலக வாழ்க்கையில் சிக்கிக்கொள்ளாமல், உமது சித்தப்படி நாளும் வழிநடந்து திருஅவையை பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. பாதுகாப்பின் பெட்டகமே இறைவா, உலகெங்கும் பேரழிவுகள், கலவரங்கள், கொலை, கொள்ளை, இயற்கை பேரழிவுகள் நிகழ்கின்ற இக்காலச் சூழலில் வாழும் உம் மக்களை திடப்படுத்தியருளும். இவையனைத்தும் உமது வருகையை எங்களுக்கு உணர்த்துகின்ற இந்நேரத்தை நாங்கள் அறிந்து எங்களை நாங்கள் உமக்கேற்ற பாதையில் பயணிக்கத் தேவையான ஞானத்தை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. நீதியின் நாயகரே எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்கள் நாட்டிற்காகவும், மக்களுக்காகவும் தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்பதை உணர்ந்து, மக்களின் தேவைகளை அறிந்து உணர்ந்து செயல்பட்டவும், நாட்டை வளர்ச்சிப்பாதையில், நேர்மையான வழியில் நடத்த வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. குழந்தைகளை என்னிடம் விரவிடுங்கள் என்றவரே, இன்று பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் முதல் கல்லூரிச் செல்லும் மாணவர்களை உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் கற்கின்ற கல்வியை திறம்பட கற்று, வாழ்வில் தங்களின் எதிர்காலத்தை தெளிவாக தேர்ந்துச் செல்ல உமதாற்றலையும் வல்லமையையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 16.07.2025 கார்மேல் மலை புனித கன்னி மரியா திருப்பலி

**முன்னுரை** திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

கார்மேல் மலை பாலஸ்தீன நாட்டில் உள்ளது. இம்மலையில் வாதி-என்-சிய்யா என்ற இடத்தில் துறவிகள் சேர்ந்து அன்னைக்கு சிற்றாலயம் ஒன்று எழுப்பி வணங்கி வந்தார்கள். இந்த மலையில்தான்

முன்பு எலியா இறைவாக்கினர், இறைவனின் வல்லமையை போலி இறைவாக்கினர்களுக்கு வெளிப்படுத்தினார். சிலுவைப்போர் நடைப்பெற்ற 11ம் நூற்றாண்டில் சில துறவிகள் எலியாவைப் பின்பற்றி வாழ விரும்பி இதே மலைக்குச் சென்றார்கள். இவர்கள் "கார்மேல் மலைத் தூய துறவிகள்" என்று அழைக்கப்படுகிறார்கள். கார்மேல் மலை புனித கன்னிமரியாவின் விழா 14ம் நூற்றாண்டு முதல் கொண்டாடப்படுகிறது. கார்மேல் சபையின் தலைமைத் தந்தையாக இருந்த புனித சைமன் ஸ்டோக் என்பவருக்கு அன்னை மரியா 1251 ஜூலை 16 அன்று காட்சி கொடுத்தார்கள். அக்காட்சியில் சைமனிடம் உத்தரியம் ஒன்றைக் கொடுத்த அன்னை மரியா, "இது கார்மேல் துறவிகளுக்கு வழங்கப்படும் தனிச்சலுகை இதைப்பக்தியோடு அணிபவர்கள் இம்மையிலும் மறுமையிலும் எவ்வித துன்பத்திலும் நரக நெருப்பிலும் அல்லலுற மாட்டார்கள்" என்றார். அன்னை மரியா காட்சி கொடுத்த அந்த நாளே கார்மேல் மலை புனித கன்னிமரியாவின் விழாவுக்கான நாளாக குறிக்கப்படுகிறது. இந்த நாளில் நாமும் உத்தரியம் அணிந்து அன்னையின் வழி நடைபயில இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எங்களை கரம்பிடித்து வழிநடத்தும் அன்புத் தந்தையே, எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், நற்செய்திப்பணியாளர்கள் அனைவரும் தங்களின் அழைப்பின் மேன்மையை உணர்ந்து பிரமாணிக்கத்துடன் பணிசெய்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. எக்காலத்திற்கும் அரசரே எம் இறைவா, எங்கள் நாட்டுத்தலைவர்கள், மற்றும் ஆட்சியாளர்கள் மக்கள்மீது பற்றுறுதியும், கரிசனையும், அன்பும் கொண்டு செயல்பட அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. மகிமையின் ஒளியே இறைவா, எம் நாட்டில் உள்ள இளைஞர்கள், மாணவர்கள் அனைவரும் தங்கள் வாழ்வின் எதிர்கால நலன்கருதி விடாமுயற்சியோடு உழைத்து மகிழ்வான வாழ்வு வாழ்ந்திட அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 20.07.2025 பொதுக்காலம் 16ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

I. தொ.நூ. 18: 1-10 II. கொலோ. 1: 24-28 லூக். 10: 38-42

இறையேசுவின் அன்புக்குரியவர்களே, இன்று நம் திருஅவை நம்மை வழிநடத்த அளித்துள்ள முதல் வாசகமும், இரண்டாம் வாசகமும் நற்செய்தியும் ஒரே கருத்தைத்தான் வலியுறுத்துகின்றன. தம் கூடாரத்தில் அமர்ந்திருந்த ஆபிரகாம், வாயிலில் மூவர் நிற்பதைக்கண்டு அவரருகே ஓடிச்சென்று தரைமட்டும் தாழ்ந்து வணங்கி, உம் அருள் எனக்கு

கிடைக்குமாயின் என்னைவிட்டு விலகி போகாதீர்கள். இம்மரத்தடியில் அமர்ந்து தங்கள் கால்களை கழுவியபின் உணவு கொடத்து உபசரித்தபின் பயணத்தை தொடருங்கள் என்றும் கூறுகிறார். உணவு உண்டபின் போகும்முன் அவாக்ள் அடுத்தமுறை வரும்போது ஆபிரகாமின் மனைவி சாராவிற்கு குழந்தை பிறந்திருக்கும் என்று ஆண்டவரின் வார்த்தைகயாக கூறிவிட்டு சென்றார்கள். புனித பவுலடியாரும் தன் வழியாக தலைமுறை தலைமுறையாக மறைந்திருந்த இறைத்திட்டம் இறைமக்களுக்கு வழங்கப்பட்டு கிறிஸ்துவின் மாட்சி வெளிப்படுத்தப்பட்டு அதன்மூலம் நாமும் மாட்சிபெறுவோம் என்ற எதிர்நோக்கு நமக்கு அளிக்கப்பட்டுள்ளது என்றே கூறுகிறார். நற்செய்தியாளர் லூக்காவும் இயேசு மரியா மார்த்தா இல்லத்திற்கு சென்று அமர்ந்தபின் மார்த்தா உணவு சமைக்கும் வேலையை ஏற்கவும் மரியா இயேசுவின் காலடியில் அமர்ந்து அவரது போதனைகளை கேட்கவும், மரியா தனக்கு சமையலில் உதவி செய்யவில்லையென்று இயேசுவிடம் மார்த்தா கேட்க, அதற்கு இயேசு "மரியா நல்லப் பங்கை ஏற்றுக்கொண்டாள்" என்ற கருத்தை புனித பவுலடியார் (உரோ.15:7) ல் கூறியுள்ளபடி "கிறிஸ்து உங்களை ஏற்றுக்கொண்டதைப்போல நீங்களும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது கடவுளை பெருமைப்படுத்துகிறீர்கள்" என்கிறார். மற்றவர்களை வரவேற்று உபசரிக்கும்போது நமக்கு சற்று துன்பம் ஏற்பட்டாலும், நமக்கு மற்றவர்களின் வருகையால் கிடைக்கும் வரங்களை நினைத்து மகிழ்ச்சியடைய வேண்டுமென்ற சிந்தனையோடு இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. மூவொரு இறைவா, திருஅவையின் புதிய வழிதோன்றலான திருத்தந்தை 14ம் சிங்கராயர், கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், அருட்பணியாளர்கள், துறவற கன்னியர் மற்றும் அனைத்து திருநிலையினர் அனைவரையும் உமது கரம் ஒப்புவிக்கின்றோம். உம் மந்தையை வழிநடத்தும் பண்புகளையும், நல்லாசீரையும் வழங்கி வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பின் இறைவா, எமக்களித்துள்ள இன்றைய இறைவார்த்தைகளின்படி நல்லுள்ளத்தை தரும்படியாகவும், சிரமங்கள் ஏற்பட்டாலும் பிறரை ஏற்றுக்கொண்டு ஒன்றித்து வாழும் மனதை தரும்படியாகவும் பிறரை உபசரித்து வாழும் மனப்பக்குவத்தை தரும்படியாகவும், தன்னலம் துறந்து மன்னித்து ஏற்கும் மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. பாதுகாக்கும் இறைவா, உலகபோக்கில் நாங்கள் பயணித்து கொண்டிருக்கும் எங்கள் பயணத்தை, குடும்ப சூழ்நிலைக்கேற்ப பொருளாதார கஷ்டங்களால் தவறான பாதையில் செல்லாமல், உம்மீது

ஆழ்ந்த நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டவர்களாக நாங்கள் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. வழிநடத்தும் வள்ளலே எம் இறைவா, கடன் பிரச்சனைகளாலும், குடும்ப சூழ்நிலையினாலும் வாழ வழியின்றி தவிப்போரையும், அனாதைகளையும், பெற்றோர், உற்றார், உறவினர் இருந்தும் இல்லா நிலையில் தவிப்போர், நோயினால், பசி, பிணியினால் வாடுவோரை நீர் கண்ணோக்கும். இவர்களின் துன்பங்கள் நீங்கி உம்மோடு இணைந்து உம்மைப்பின்பற்றி வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 22.07.2025 புனித மகதலா மரியா விழா திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜான் அலெக்ஸ்

அன்புக்குரியவர்களே, இன்று நாம் புனித மகதல மரியா அவர்களின் திருவிழாவை கொண்டாடுகின்றோம். இவர்தான் இயேசுவோடு மிக நெருக்கமான அன்புறவு கொண்டிருந்தவர் என்பதற்கு நற்செய்தி நூல்கள் பல சான்றுகள் வழங்குகின்றன. குறிப்பாக இயேசுவின் இறப்பின் வேளையில் அவரது ஆண் சீடர்கள் ஓடிவிட, சிலுவையடியில் நின்றுகொண்டிருந்த துணிவுமிக்க பெண்களில் இவரும் ஒருவர். இயேசுவை கல்லறையில் வைத்தபிறகு கூட, விடியற்காலையில் இருள்நீங்கும் முன்பே இயேசுவின் கல்லறைக்கு சென்றார் என்று நாம் விவிலியத்தில் வாசிக்கும் போது வியப்படைகிறோம். ஆம் அன்பில் அச்சமில்லை (1 யோ 4:18), அன்பிற்கு முடிவிராது (1கொரி 13:10) என்பதுபோல அன்புக்கு இலக்கணமும் அடையாளமுமாக விளங்குபவர் மதலேன் மரியா. இறந்த பின்பும் அன்பு வாழும் என்பதை எண்பித்தவர் மதலேன் மரியா. இயேசுவின் உயிர்ப்புக்கு மதலேன் மரியாவை ஒரு முக்கிய சாட்சியாக நாம் விவிலியத்தில் பார்க்கின்றோம். ஆகவே இப்புனிதரைப் போல ஒருவர் மற்றவரோடு அன்புறவுடன் வாழ தொடர்ந்து இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தூய்மையின் திருஉருவே இயேசுவே, உமது திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவருக்காகவும் மன்றாடுகிறோம். தூய மகதலா மரியா இயேசுவின் உயிர்ப்புக்கு சான்று பகர்ந்ததுபோல் இவர்களும் உலகமக்களுக்கு உயிர்த்த இயேசுவுக்கு சான்று பகர்ந்து வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அனாதைகளின் ஆதரவே இறைவா, மகதலா மரியா தனது வாழ்வில் இயேசுவை தேர்ந்துக்கொண்ட பிறகு அவருக்கு தன் வாழ்வையே அர்ப்பணித்து பணிவிடை புரிந்ததாரே, எங்கள் குடும்பங்களிலும் தாய்மார்கள் அனைவருக்கும் உதவிபுரிகின்ற நல்ல மனதினைத்தந்தருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. குணமளிக்கும் ஆண்டவரே, இன்று திருவிழா கொண்டாடும் மகதலா மரியா ஒரு பெண்ணாக இருந்தாலும் ஆண்டவரின் உடலை தூய்மை படுத்த துணிவோடு விடியற்காலையில் கல்லறைக்குச் சென்று நமக்கு துணிவு என்றும் பாடத்தை கற்றுக்கொடுத்தார். நாங்களும் அதிகாலை சீர்கேடுகளை தட்டிக்கேட்கும் துணிச்சலை தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 25.07.2025 புனித யாக்கோபு : திருத்தூதர் விழா திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜான் சுரேஷ்

இறை சமூகமே இன்று அன்னையாம் திருஅவை இயேசுவின் சீடர்களில் ஒருவரான புனித யாக்கோபுவின் நினைவை கொண்டாடுகிறது. செபதேயுவின் மக்கள் யாக்கோபும், யோவானும் இயேசு அரியணையில் அமரும்போது அவருக்கு வலப்புறம் ஒருவரும் இடப்புறம் மற்றவரும் அமர தங்களுக்கு இரங்கும் என்று வேண்டினர். இவர்கள் இயேசுவின் சீடர்களாகவும், சகோதரர்களாகவும் வாழ்ந்ததாக மரபு கூறுகின்றது. யாக்கோபு எருசலேம் திருச்சபையின் தலைவராக இருந்தவர். புனித பவுல் புனித யாக்கோபுவை திருச்சபையின் தூண் என்று குறிப்பிடுகிறார். இவரின் திருமுகம் ஐந்தே அதிகாரம் கொண்ட சிறிய திருமுகமாயினும் சோதனைகள், ஏழைகள், நம்பிக்கை நற்செயல்கள், நாவடக்கம், மெய்ஞானம், உலகத்தோடு நட்பு பிறரை குற்றப்படுத்துதல், செல்வம் போன்ற தலைப்புகளில் அரும்பெரும் கருத்துக்களை எடுத்துக்கூறி நம்மை இயேசுவின் மதிப்பீடுகளின்படி வாழ அழைக்கின்றார். அவரை நினைவுகூறும் இந்நாளில் நாமும் அவரைப்போல் இறைவார்த்தையை வாழ்வாக்க இத்திருப்பலியில் பக்தியுடன் செபித்து பங்கு பெறுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையின் நாயகனே இறைவா, திருஅவையை வளமுடன் வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் ஆகிய அனைவரும் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி ஏழை எளியோருக்கு நல் உள்ளத்துடன் பணிபுரியும் தராள மனதைத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பே உருவான இறைவா, அருளாளர் பிரான்சிஸ் கெசி மற்றும் அவரது நான்கு தோழர்களைப் போன்று, நாங்களும் சேவை மனப்பான்மையிலும், ஒற்றுமையிலும், அன்பு செலுத்துவதிலும், துன்பங்களைக் கண்டு களைத்து போகாமலும் "பிறர் அன்பே தலையான பண்பு" என்ற கருத்தும் கொண்டு வாழ அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. வழிநடத்தும் தலைவரே எம் இறைவா, எம் தேசத்தை ஆட்சி செய்துவரும்

தலைவர்கள், தேசமக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் சிறந்த திட்டங்களை உருவாக்கி மக்களுக்காக உழைக்க அவர்களுக்கு நல்ல மனதினைத் தந்தருளும்படி உம்மை மன்றாடுகிறோம்.

## 26.07.2025 புனிதர்கள் சுவக்கின், அன்னாள் திருவிழா திருப்பலி

**முன்னுரை** திரு. ஜீசஸ் மகுட மன்னன்

எனது அருமையான சகோதர சகோதரிகளே, இன்று திருஅவையும், அனைத்து தாத்தா பாட்டிகளுக்கும் பாதுகாவலரான புனிதர்கள் சுவக்கின் அன்னம்மாள் விழாவைக் கொண்டாடுகிறது. வரம் பெற்று பெற்றெடுத்த மரியாவின் பெற்றோர்கள். இவர்கள் தாவீதின் வழி வந்தவர்கள். கலிலேயாவிலிருந்து எருசலேமுக்குக் குடிபெயர்ந்தார்கள். அவர்கள் வாழ்ந்த இடத்தில் ஆலயம் கட்டப்பட்டுள்ளது. யூதேயாவிலுள்ள பெத்லகேமில் பிறந்தவர் அன்னம்மாள். திருமணம் முடிந்ததும் நாசரேத்து நகரில் வாழ்ந்தனர். மிகவும் செல்வ செழிப்பான குடும்பம். ஆனால் குழந்தைச் செல்வம் இல்லாதது சமுதாயத்தில் அவமானத்துக்குரியதாய் இருந்தது. ஆலயப் பெருவிழாவில் பொருத்தனை செய்யும்முறை சுவக்கினுக்கு வந்தது. தூபம் காட்ட ஆலய பீடத்துக்குச் செல்லும்போது, ஒருவர் காட்சியில் தோன்றி குழந்தை பாக்கியம் பெறாத நீர், தூபம் காட்ட தகுதியற்றவர் எனக் கூறினார். மனம் நொந்துபோன சுவக்கின் அழுது புரண்டார்.

மிகப்பெரிய அவமானம் அடைந்த சுவக்கின் பக்கத்திலுள்ள மலைக்கு ஓடிவிட்டார். அன்னம்மாள் அவரைத் தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை. ஒருமாதக்காலமாக, மலையில் அழுது ஆண்டவரிடம் குழந்தை வரம் கேட்டார். இறைவன் தரும் குழந்தையை அவருக்கே அர்ப்பணிப்பதாகவும் வாக்களித்தார். வீட்டில் அன்னம்மாளும் கடவுளிடம் அழுது செபித்துக் கொண்டிருந்தார். கடவுள் இருவருடைய செபத்தையும் கேட்டு இரக்கம் கொண்டார். இறைத்தூதர் ஒருவர் இருவருக்கும் தோன்றி, உங்களுக்குக் குழந்தைப் பிறக்கும் என உறுதியளித்தார். வீட்டிற்கு வந்த சுவக்கின் அன்னம்மாவிடம் நடந்ததைக் கூற, அதே தேவதூதர் தனக்கும் கூறினார் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். வாக்களித்தபடியே அழகுமிகு பெண் குழந்தை பிறந்தது. "மரியா" எனப் பெயரிட்டனர். நேர்ந்து கொண்டபடியே மூன்று வயதில் மரியாவை ஆலயத்தில் அர்ப்பணிக்கிறார்கள். மேலும் தமது செல்வத்தை கடவுளுக்கு ஒருபாகமும், ஏழைகளுக்கு ஒருபாகமும், தங்களின் வாழ்வாதாரத்திற்கு ஒருபாகமும் பிரித்துக் கொடுக்கிறார்கள். சில ஆண்டுகளில் சுவக்கினை இறைவன் அழைத்துக் கொள்கிறார்.

அன்னம்மாளையும் ஆண்டவர் சில ஆண்டுகள் கழித்து அழைத்துக்கொள்கிறார். மரியாவின் மூன்று வயதுவரை இறைஞானத்தில் வளர்த்து, இறைவன் சித்தப்படி எப்படி வாழவேண்டுமென்பதை சிறுவயதிலேயே தெளிவுப்படுத்தி விட்டனர். தந்தையாகிய இறைவன்

மரியாவை தம் ஏக மகன் இயேசுவைப் பெற்றெடுக்கும் தாயாகத் தெரிந்துக்கொள்கிறார். புனிதர்கள் சுவக்கின் அன்னம்மாள் கடவுள் பக்தியிலும், பயத்திலும், இல்லற வாழ்க்கையிலும், பிரமாணிக்கமாக வாழந்ததுபோல், நாமும் வாழ்வோம் என வாக்களித்து, இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருச்சபையின் தலைவராகிய இயேசுவே, திருச்சபையில் பணியாற்றும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், துறவறத்தார் அனைவரையும் உமது மேய்ச்சலின் மக்களை உம் திருவுளத்தின்படி நேரிய வழியில் நடத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. மன்னிக்கும் தந்தையே, உமது மக்களாகிய எங்களையும் உமக்கெதிராக நாங்கள் செய்த எல்லா குற்றங்களையும், குறைகளையும், பாவங்களையும் மன்னித்ததுபோல நாங்களும் எங்களுக்கு எதிராக தீமை செய்தவர்களை மன்னித்து, மறந்து உமது அன்பு மக்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. முதியோர்களை காத்து இரட்சிக்கும் இறைவா, இன்றைய நெருக்கடியான உலக வாழ்க்கையில் பிள்ளைகளுக்கு தொந்தரவாக இருப்பதாகத் தமது பெற்றோரை முதியோர் இல்லத்தில் சேர்த்துவிட்டு, கடவுளுக்கு விரோதமான வாழ்க்கையை வாழும், குடும்பங்களுக்கு இறைஞானம், இறைபக்தி, இறைபயம் தந்து, உமது பேரிரக்க வரங்களில் வாழும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 27.07.2025 பொதுக்காலம் 17ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. லதா சுரேஷ்

I. தொ.நூ. 18: 20-32 II. கொலோ. 2: 12-14 லூக். 11: 1-13

இறையேசுவின் பிரியமான சகோதர சகோதரிகளே, விண்ணரசிலிருந்து நம்மை பிரித்து இறையன்பிலிருந்து தனிமைப்படுத்துவது நம் பாவங்களே. ஆறியாமையால் குழந்தைப் பருவத்தில் செய்யும் பாவங்கள் யாரையும் காயப்படுத்துப்பபோவதில்லை. புரிந்த வயதில் சர்ந்தர்ப்ப சூழல்களால் செய்யப்படும் குற்றங்கள் மன்னித்து ஏற்றுக்கொள்ளத் தக்கதாக அமைகின்றது. ஆனால் செய்யும் குற்றங்களின் பொருளுணர்ந்து அதன் விளைவுகளை அறிந்து செய்யும் பாவங்கள் தண்டனைக்குறியதாகும். ஆதாம் ஏவாள் செய்த பாவத்தால் ஏதேனின் மகிழ்வான வாழ்வினை இழந்து, நெற்றிவியர்வை நிலத்தில் விழ பாடுபட்டு உண்ணும்நிலை உருவானது. இறைவனின் அருகாமையை இழந்து அவரை காணமுடியாநிலை உருவானதும் மனித தகுதியை இழந்து மிருக குணத்தினைப் பெற்றான் காயின் என்பதை நாம்

காண்கின்றோம். செய்த பாவங்களையும் தவற்றினையும் உணர்ந்து மனம் வருந்தி மன்னிப்பு பெறும்பொழுது தெய்வச் சாயலைப் பெறுகின்றோம். அன்று பாவங்களிலிருந்து மீட்டு வழிநடத்த இறைவாக்கினர்களும், நீதியின் தலைவர்களும் இருந்தனர். இறைவனிடம் மக்களுக்காக பரிந்து பேசினார்கள். பாவமன்னிப்பு பெற்றார்கள் என்பதை தெளிவாக முதல் வாசகம் நமக்கு உணர்த்துகிறது. நம் குற்றத்திற்கு மன்னிப்பு பெற ஏங்கும் நாம் பிறர் குற்றங்களை மன்னித்து மறக்க வேண்டும். அவ்வாறு மன்னிக்கும்பொழுது அவர்கள் பார்வையில் தெய்வமாகவே மாறுகின்றோம். இன்று நம்மை மீட்க தூய்மைப்படுத்த அருட்சாதனங்களும், ஆவியானவரின் அரவணைப்பும் உண்டு. பாவத்திற்கு மரணம் என்னும் நிலைமாற்றப்பட்டு, தன் ஒரே மகனின் இன்னுயிரை ஈந்து தம் மக்களை மீட்டுக்கொண்டார். தம்மோடு சேர்ந்துக் கொண்டார். நமக்கு எதிரான ஒப்பந்த விதிகள் கொண்ட கடன் பத்திரத்தை அழித்துவிட்டார். சிலுவையில் வைத்த அறைந்து விட்டார் என்பதை நாம் உணரவேண்டும். உரிமையோடு கேட்கும் பிள்ளைகளாக வேண்டும். அதற்கு தகுதிப்பெறும் பொருட்டு இத்திருப்பலியில் நம் பாவங்களை நினைத்து மனம்வருந்தி மன்னிப்புப்பெற பக்தியோடு இப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பின் ஊற்றாகிய இறைவா, உம்மால் தேர்ந்துக்கொள்ளப்பட்ட திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் திருநிலையினர் அனைவரையும் நீர் ஆசீர்வதியும். இவர்கள் இவ்வுலக வாழ்க்கையில் சிக்கிக்கொள்ளாமல், உமது சித்தப்படி நாளும் வழிநடந்து திருஅவையை பாதுகாத்து வழிநடத்திட உமது அருட்கொடைகளையும் இவர்களுக்கு அளித்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. பாதுகாப்பின் பெட்டகமே இறைவா, உலகெங்கும் பேரழிவுகள், கலவரங்கள், கொலை, கொள்ளை, இயற்கை பேரழிவுகள் நிகழ்கின்ற இக்காலச் சூழலில் வாழும் உம் மக்களை திடப்படுத்தியருளும். இவையனைத்தும் உமது வருகையை எங்களுக்கு உணர்த்துகின்ற இந்நேரத்தை நாங்கள் அறிந்து எங்களை நாங்கள் உமக்கேற்ற பாதையில் பயணிக்கத் தேவையான ஞானத்தை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. நீதியின் நாயகரே எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்கள் நாட்டிற்காகவும், மக்களுக்காகவும் தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்பதை உணர்ந்து, மக்களின் தேவைகளை அறிந்து உணர்ந்து செயல்பட்டவும், நாட்டை வளர்ச்சிப்பாதையில், நேர்மையான வழியில் நடத்த வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. குழந்தைகளை என்னிடம் விரவிடுங்கள் என்றவரே, இன்று

பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் முதல் கல்லூரிச் செல்லும் மாணவர்களை உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் கற்கின்ற கல்வியை திறம்பட கற்று, வாழ்வில் தங்களின் எதிர்காலத்தை நோக்கி பயணிக்கும் வழியினை தெளிவாக தேர்ந்து திறம்பட செயல்படும் ஆற்றலையும் வல்லமையையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 28.07.2025 புனித அல்போன்சா முட்டாத்துப்படத்து திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிசம்பந்தன்

"கேரள நாட்டின் கமலம்" என்று அழைக்கப்படும் இவர் பிறந்தது முதல் தன் இறுதிநாள் வரை தொடர் துன்பம், நோய் இவற்றிலும் இறைவனோடு இணைந்திருத்தல், அவருக்காகவே வாழ்தல், பணிபுரிதல் என்பனவற்றில் எவ்வளவு உறுதியாயிருந்தார் என்பது அவரது வாழ்வை தியானித்தால் நமக்கு புரியும். பிறக்கும்போதே ஓர் அதிர்ச்சியில் அன்னைக்கு குறை பிரசவமாக பிறந்தார். அப்போதே அன்னையை இழந்தார். சிற்றன்னையின் கொடுமைக்கு ஆளாகினார். 4வயதிலேயே தோல்நோய்க்கு ஆளானார். பள்ளிப்படிப்பு முடிந்ததும் சித்தி இவருக்கு திருமணம் செய்ய முடிவெடுத்தார். மாறாத தழும்பிருந்தால் தம்மை யாரும் திருமணம் முடிக்க முன்வரமாட்டார்கள் என கருதி அடுப்பு நெருப்புக்குழியில் தன் இரு கால்களையும் விட்டு நீங்காத தழும்புகளாய் கருக்கிக் கொண்டார். இதன் விளைவாக கிளாரிட்ட துறவற சபையில் சேர்ந்து பர்ணஞானம் மடத்தில் பணிபுரிந்தார். அனைவரிடத்திலும் தொண்டு மனப்பான்மையோடும் புன்முறுவலோடும் பணிவிடை புரிந்து வந்தார். அப்போதும் மிகவும் உடல்நலக்குறைவு ஏற்பட்டு சிறுமலர் தெரசாவிடம் மன்றாடி சுகம் பெற்றார்.

இவரது சகோதரிகளே இவர் புண்ணியவதி வேடம் போடுகிறார் என அவமானப்படுத்தனர். ஆனால் புனித அல்போன்சா எப்போதும் சிலுவைப் பாடுகளையே தியானித்து "நான் கோதுமை மணி அப்பமாக" மாற்றப்பட வேண்டும் என சிரித்த முகத்தோடு கூறுவார். இவருக்கு முத்திபேறு பட்டம் திருத்தந்தை 2ம் பவுலால் 1986ம் ஆண்டு கோட்டயத்தில் வழங்கப்பட்டது. புனிதர் பட்டம் திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பரால் 2008ம் ஆண்டு அக்டோபர் 12ம் நாள் கொடுக்கப்பட்டது. இவர் நமக்கு ஓர் உன்னத வழிகாட்டி. நாமும் இவரைப்போல் எவ்வித சூழலிலும் இறைவனில் ஒன்றித்திருந்தால் தீயவையான களைகளை நம்மிடமிருந்து அகற்றி நல்மணிகளாக பயனுள்ள கோதுமை மணிகளாக நம்மை பயன்படுத்தி அவரது களஞ்சியத்தில் இணைத்துக் கொள்வார் என்ற ஆழ்ந்த விசுவாசத்தோடு இத்திருப்பலியில் பக்தியோடு இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, உமது திருப்பணிக்காக தனித்தன்மையோடு தேர்ந்தெடுத்த எங்கள் திருஅவையின் பணியாளர்களாக திருத்தந்தை, பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள் இருபால் துறவியர்கள் அனைவரும் தங்கள் இறையழைத்தலின் மேன்மையை உணர்ந்து, இறைமக்களை இயேசுவின் அன்பு, சமாதானம், பொதுநலவழியில் நடத்திச் செல்ல வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. குணமளிக்கும் வள்ளலே எம் இறைவா, பல்வேறு நோய்களினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொருவருக்காகவும் வேண்டுகிறோம். தூய அல்போன்சா தனது வாழ்வில் பல்வேறு நோயினால் அவதிப்பட்டிருந்தாலும் அவர் இறைவனின்மீது கொண்ட நம்பிக்கையால் தனது நோய்களிலிருந்து விடுபட்டதுபோல நோயுற்றோரும் உம்மீது கொண்ட நம்பிக்கையினால் நலம்பெற வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பின் உறைவிடமே இறைவா, எங்கள் பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்காகவும் செபிக்கின்றோம். நீரே அவர்களுடனிருந்து உம் அன்பு நெறியின்படி வழிநடத்தி உமக்கேற்ற வாழ்வு வாழவும், உடல்உள்ள ஆன்ம சுகமளித்து காத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 29.07.2025 புனிதர்கள் மார்த்தா, மரியா லாசர் திருப்பலி

**முன்னுரை**

திரு. செல்வன்

இறையேசுவின் இனிய மக்களே, இன்றைய தினம் நமது திருஅவை புனித மார்த்தாவின் நினைவு நாளைச் சிறப்பிக்கின்றது. இவர் சகோதரி மரியா சகோதரன் லாசர். "பெத்தானியா"வில் வாழ்ந்த வசதிமிக்க குடும்பத்தவர் என்று வரலாறு கூறுகிறது. மேலும் இயேசு பெத்தானியாவிற்கு வரும்போது இவர்கள் இல்லத்திற்கு வந்து இவர்களை சந்தித்து செல்வார். இயேசுவின் 72 சீடர்களும் இவர்களின் இல்லம் வந்து உணவருந்தி செல்வார்கள் என்றும் குறிப்பு கூறுகிறது. அவ்வாறு ஒருமுறை இயேசு புனித மார்த்தாவின் இல்லத்திற்கு வந்தபோது வழக்கம்போல் மரியா இயேசுவின் பாதத்தின் அருகில் அமர்ந்து அவரது போதனைகளை கேட்டுக்கொண்டிருந்ததை கண்டு புனித மார்த்தா சிறிது கோபத்துடன் "எனக்கு உதவி செய்யாமல் போதனைகளை கேட்டுக்கொண்டிருப்பதேன்" என கேட்க இயேசு மறுமொழியாக உலக காரியங்களை பற்றி கவலைப்படாதே மரியா அவளுக்குரிய நல்ல பங்கை தேர்ந்தெடுத்துக் கொண்டாள் என்று கூறினார். இயேசுவின் உயிர்ப்பை உலகிற்கு எடுத்து கூறவும் சகோதரன் லாசரின் புனித மார்த்தா, இவர் இறந்ததும் இவரது உடலை "தாரஸ்கான்" என்னும் இடத்தில் மிகுந்த மரியாதையுடன், அடக்கம் செய்தனர். திருத்தந்தை 12ம்பத்திநாதர்

இவருக்குப் புனிதர்பட்டத்திற்கு முன்பாகவே இவர் பேராலே சபைகள் தோன்றுவதற்கு அனுமதி கொடுத்தார். கத்தோலிக்க பாரம்பரியத்திலும், ஆங்கிலிக்கன், கீழைத் திருச்சபை, லூத்தரன் ஆகிய பாரம்பரியத்திலும் இவரது சபை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இத்திருப்பலியில் புனித மார்த்தாவின் நம்பிக்கையையும், விருந்தினரை உபசரிக்கும் பண்பினையும் நாம் பெற அருள்வேண்டி செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையின் சங்கமமே இறைவா, எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், திருநிலையினர் ஆகிய அனைவரும் தாங்கள் எடுத்துக் கொண்ட பணியில் உண்மையுடனும், இறைவனிடம் தன்னை அர்ப்பணித்து, அவரின் திருவுளத்திற்குப் பணிந்து செயலாற்றிய புனித மார்த்தாவைப் போன்று பணிபுரிந்திட அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. உறவின் சங்கமமே இறைவா, எங்கள் குடும்ப வாழ்வில் உறவில் ஒருவரையொருவர் பிரியாது, விட்டுக்கொடுத்து அன்பு செய்து இறைபக்தியுடன் வாழவேண்டிய அருளை புனித மார்த்தா வழியாக வழங்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. பாதுகாப்பின் சிகரமே இறைவா, நமது தேசத்தின் புதிய பொறுப்பாளர்கள் தங்கள் சுயநலன்களை விலக்கி, மக்களின் நலன்கருதி தேசத்தின் முன்னேற்றத்தை மனதில் இருத்தி தங்கள் கடமைகளை, பணிகளை சரிவர செயலாற்றும் பொறுமையை வழங்கிட புனித மார்த்தா வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## 31.07.2025 லொயோலா நகர்ப் புனித இஞ்ஞாசியார் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிவில்சன்

ஸ்பெயின் நாட்டின் லொயோலா என்ற இடத்தில் 1491ல் இஞ்ஞாசியார் பிறந்தார். இவரது திருமுழுக்குப் பெயர் இனிகோ. தம் இளவயதில் மிகச்சிறந்த போர் வீரனாக மாறினார். 1521ல் ஸ்பெயின் நகரான பாம்பலோனாவை பிரான்ஸ் மன்னன் முற்றுகையிட்டபோது நடைபெற்ற போரில் இஞ்ஞாசியாரின் முழங்காலில் குண்டு பட்டு பலத்த காயமுற்றார். அச்சமயத்தில் மருத்துவமனையில் சிகிச்சைப்பெற்று வந்தார். ஏறக்குறைய ஓராண்டு காலம் எங்கும் நடமாட முடியாமல் ஓய்வில் இருந்தபோது பொழுதுபோக்கிற்காக புத்தகங்கள் படித்தார். அதில் "இயேசுவின் வாழ்வு" மற்றும் "புனிதர்களின் வாழ்க்கை வரலாறு" ஆகிய இரு புத்தகங்கள் இவரது உள்ளத்தை தொட்டன. புனிதர்களான அசிசியாரும், தோமினிக்கும் இறைவனுக்காக எவ்வளவோ செய்திருக்க "நான் ஏன் செய்யக்கூடாது" என்று தன்னையே அடிக்கடி கேட்டுக்கொண்டு இயேசுவின் நல்ல படைவீரனாக மாற எண்ணினார். குணமடைந்த பின்பு,

மான்ரேசா என்னும் இடத்தில் 10 மாதங்களாக தனிமையில் செபமும் தவமும் மேற்கொண்டார். தன்னுள் எழுந்த எண்ணங்களை "ஆன்மீக பயிற்சிகள்" என்ற ஏடாக எழுதி வைத்தார். அதில் அவர் ஒன்றை அதிகம் வலியுறுத்துகிறார். அனைத்தையும் "இறைவனின் அதிமிக மகிமைக்காகச் செய்யுங்கள்" இந்த புனிதர் "இயேசு சபை"யை ஆரம்பித்தார். 1556ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31ம் நாள் இறைவனடி சேர்ந்தார். இவர் "தியானங்களின் பாதுகாவலர்" என்று அழைக்கப்படுகிறார். "கல்வி மற்றும் கல்வியாளர்களின்" பாதுகாவலர் என்றும் அழைக்கப்படுகிறார். இறைமகிமைக்காக உழைப்போம், மண்ணில் மனிதம் வளர இந்தப் புனிதர் வழியாக திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. ஆற்றலும் வல்லமையும் சக்தியும் தரும் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர்கள், பொதுநிலையினர் ஆகியோருக்கு ஆற்றலும் வல்லமையும் சக்தியும் கொடுத்து உம் விடுதலையின் செய்தியை அகலமெங்கும் அறிவித்திடும் அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. மக்களை ஆர்வத்துடன் காப்பவரே, எம் நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபடும் அனைத்து தலைவர்களையும், ஆட்சியாளர்களையும் ஆசீர்வதித்து, ஒவ்வொருவரின் உழைப்புக்கேற்ற நற்பயனைக் கொடுத்து, எம் நாட்டை முன்னேற்றப்பாதையில் நடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. உமது வார்த்தையை அனுப்பி குணமளிக்கும் இறைவா, மருத்துவமனைகளிலும், இல்லங்களிலும் நோய்வாய்ப்பட்டிருக்கும் எம் மக்களுக்கு நீரே உமது வார்த்தையை அனுப்பி குணப்படுத்த வேண்டுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி 2: நம்பிக்கையில் வளர...

## சென்னை சலேசிய மாநிலமும் புனித தோமையாரும்

திரு. ஜான் அலெக்ஸ்

ஜூலை மாதம் சென்னை சலேசிய மாநிலத்திற்கு இன்னொரு சிறப்புமிக்க மாதமாகும். ஆம் இம்மாதம் 3ம் தேதி அதன் பாதுகாவலரான தூய தோமாவின் பெருவிழாவினை மகிழ்ச்சியோடும் நன்றியோடும் சிறப்பிக்கும் மாதமாகும். இந்நேரத்தில் நம் நாட்டிற்கு கடவுளின் நற்செய்தியை கொண்டுவந்த தூய தோமாவைப் பற்றி சில முக்கியமான தகவல்களை தெரிந்து கொள்வதும் அந்த நற்செய்தியின் விழுமியங்களை நமது வாழ்வால் பிறருக்கு எடுத்துக்காட்டவும், குறிப்பாக இளையோருக்கு கொண்டு சேர்ப்பதும் நமது கடமையாகும்.

நம் பாதுகாவலர் - தூய தோமா : இந்திய சலேசிய மாநிலம் தூய தோமாவை பாதுகாவலராக கொண்டு 1926ம் ஆண்டு அதிகாரப்பூர்மாக தோற்றுவிக்கப்பட்டது. அது மேலும் வளர்ச்சிப் பெற்று 1934ல் வடக்கு மற்றும் தெற்கு சலேசிய மாநிலங்களாக தனித்தனியே பிரிக்கப்பட்டு சென்னை ஏற்கனவே தோமாவின் மாநகராக இருந்த காரணத்தினால் தென்னிந்திய சலேசிய மாநிலத்திற்கு தூய தோமாவை பாதுகாவலராக கொண்டு செயல்படலாயினர். அவருடைய உடலின் திருப்பண்டங்கள் இன்று சென்னை சாந்தோமிலுள்ள அவரின் கல்லறையில் வைக்கப்பட்டுள்ளது நாம் அறிந்ததே. இதே சென்னையில்தான் தூய தோமா அவர்கள் தன்னுடைய இறுதி நாட்களை கழித்தார், பணியாற்றினார், மனமாற்றத்தை ஏற்படுத்தினார் மற்றும் அவர் போதித்தவைகளுக்கு சாட்சியாக தன்னுடைய இரத்தத்தை சிந்தினார். சென்னை சலேசிய மாநிலத்திற்கு தூய தோமா பாதுகாவலராக கிடைத்தது மாபெரும் தனிச்சிறப்பாகும். இயேசுவின் சீடர்களில் இல்லாத ஒரு சிறப்பு இவருக்கு உண்டென்றால் அது இயேசுவின் நற்செய்தியோடும், நற்செய்திக்காகவும், அவர் பண்டைய ரோமானிய பேரரசின் எல்லைப்புறங்களை துணிச்சலோடும் சவாலோடும் கடந்தது. விவிலியத்தில் அவரது பெயர் மத்தேயு (10:3), மாற்கு (3:18), லூக்கா (6) மற்றும் தி.பணி(1:13)ல் காணப்பட்டாலும், யோவான் நற்செய்தியில் மட்டும்தான் தூய தோமாவின் தனிப்பட்ட சிறப்பான பணி மற்றும் அவரது குணாதிசயங்களை நம்மால் காணமுடியும்.

தூய தோமா - மறைமுகத் தன்மையின் அமைதி : இவரது பிறப்பையோ, இளமைப் பருவத்தையோ குறித்து விவிலியத்தில் எந்த தகவல்களையும் காண முடிவதில்லை. மாறாக திருத்தூதர்களின் முதல் எழுவரின் பெயர்களும் தங்கள் அழைப்பிற்கு முன்பே குறிப்பிடப்பட்டிருப்பினும் தூய தோமாவின் பெயர்தான் முதலில் குறிப்பிடப்படுவது திருத்தூதர்களின் பெயர் பட்டியலில் தான்.

அடைமொழிகள் இல்லாத தூய தோமா : திருத்தூதர்களில் அடைமொழி இல்லாமல் குறிப்பிடப்படுபவர் தூய தோமா. உதாரணத்திற்கு : பேதுரு தலைமையில் முதல்வர் எனவும், யோவான் அன்பில் முதல்வர் எனவும், சொல்லப்பட்டுள்ளது. ஏன் யூதா இஸ்காரியோத்திற்கு கூட நிதியமைச்சர் என்ற பட்டம் சூட்டப்படுகிறது. ஆனால் "திதிம்" என்ற சொல்லால் இவரை குறிப்பிடுகிறார்கள். அதாவது திதிம் என்றால் "இரட்டையர்" என்று பொருள். விவிலியத்தில் இந்த இரட்டையர் யார் என்றும் குறிப்பிடப்படவில்லை. அதுமட்டுமல்ல தூய தோமாவின் நற்செய்தி நூல் கூட திருஅவையால் ஏற்றுக் கொள்ளப்படாத ஒரு நற்செய்தி நூல் என்பது குறிப்பிடத்தக்கது. பதவி, பட்டம், அடைமொழி இவைகளை விரும்பித் தேடும் இன்றைய உலகில், நம் பாதுகாவலரின் மறைமுகத் தன்மை நம் குறுகிய அடையாளங்களைத் தாண்டி பயணிக்க நம்மை அழைக்கின்றது.

சாட்சிய வாழ்வின் சின்னம் - தூய தோமா : யாக்கோபும் யோவானும் இயேசுவின் அரியணையின் இடது, வலது பக்க இடங்களுக்கு ஆசைப்பட்டனர். பேதுரு கூட தனது சீடத்துவத் தியாகத்திற்கு பதிலாக என்ன கிடைக்கும் என்று இயேசுவிடம் கேட்டார் ஆனால் தூய தோமா எதையும் எதிர்பார்க்காதவராக இருந்தவர். இயேசுவிற்கு தன் உயிரை வழங்க கூட தயங்காத தியாகத்தன்மை தோமாவில் வெளிப்படுகிறதை நாம் பார்க்கலாம்.

மறைப்பணியில் - தூய தோமா : கேரளத்திற்கும் தமிழகத்திற்கு வருகைத் தந்ததையும் கிபி 52ல் 7 ஆலயங்களைக் கட்டி எழுப்பி, சென்னையில் மறைச்சாட்சியாக உயிர்த்தியாகம் செய்து சாந்தோமில் அடக்கம் செய்யப்பட்டிருப்பதையும் பல நம்பிக்கைக்குரிய மரபுகளிலும், வரலாற்று சாட்சியங்களிலும் புலப்பட்டாலும், அவரின் மறைப்பணியின் முக்கிய விவரங்கள் வரலாற்றின் திரைக்கு பின் மறைந்திருக்கின்றன என்பதே உண்மை. பேதுருவும் பவுலும் யாக்கோபும் ஆற்றிய மறைப்பணிக்கு கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவமும் சிறப்பும் தூய தோமாவின் மறைப்பணிக்கு கொடுக்கப்படவில்லை என்றாலும் வரலாற்றின் மௌனத்தில் அவரது பிள்ளைகளாகிய நாம் அவரது மறைப்பணியை நம் வாழ்வில் எண்பித்துக் காட்டவேண்டும்.

உலகிற்கு உப்பாக - தூய தோமா : உலகிற்கு உப்பாக மாற அழைக்கப்படும் நாம் தூய தோமாவின் முன்மாதிரிகையை பின்பற்றி வாழ முற்படுவோம். நம் அன்றாட குடும்ப மற்று பங்கு வாழ்வின் மறைமுகத்தன்மையில் நற்செய்தியின் சாட்சிய மக்களாக வாழ்வோம்.

இறுதியாக : "நான் நம்புகிறேன். என் நம்பிக்கையின்மை நீங்க உதவும்" (மாற்கு 9:24) என்று இயேசுவிடம் கூறிய பெயர்தெரியாத ஆனால் மறக்க முடியாத அந்த விவிலிய கதாபாத்திரத்தை போல இறைவனில் நாம் கொண்டுள்ள அனுபவத்தை உறுதிப்படுத்திக்கொள்ள அழைக்கப்பட்டுள்ளோம்.

## மரியாவின் வாழ்வில் புனித சுவக்கீன் அன்னம்மாள்

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

கடவுள் தனது மீட்பின் திட்டத்தில் பலரை மீட்பின் பங்காளிகளாக, உடன் உழைப்பாளர்களாக தேர்ந்தெடுத்தார். அப்படி தேர்ந்துக் கொண்டவர்களை அவர்கள் தாயின் கருவிலேயே அர்ச்சித்து இறையழைப்பைக் கொடுத்தார். இறையழைப்பு இறைவனே விரும்பி கொடுக்கும் ஓர் அழைப்பு. "தாயின் வயிற்றில் நான் உன்னை உருவாக்கும் முன்பே அறிந்திருந்தேன், நீ பிறக்கும் முன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன், மக்களினங்களுக்கு உன்னை இறைவாக்கினராகத் தேர்ந்துக் கொண்டேன்" (எரே:1:5). "நீங்கள் என்னை

தேர்ந்துகொள்ளவில்லை நான் தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன்" (யோவான் 15:16). என்று சொல்லி தமக்குரியவர்களை கடவுள் தேர்ந்துகொண்டார். அவர்களின் பிறப்பு அதிசயத்தக்க, ஆச்சரியமான அடையாளங்களைக் கொண்டது.

உலக, சரீர நியதியின்படி குழந்தைச் செல்வம் கிடையாது என்றாகிவிட்ட வயதான காலத்தில் வயது முதிர்ந்த ஆபிரகாமுக்கும், கற்பம் தரிப்பதற்கான சாத்தியமே இல்லாத நிலையில் இருந்த சாராவுக்கும் உடன்படிக்கையின் மைந்தர் பிறந்தது கடவுளின் அருளால் தானே (தொ.நூ. 21: 1-5). மனோவாகு மனைவி மலடியாய் இருந்தபோதுதான் கடவுளின் அருள்வாக்கு பெற்று இறைவல்லமையை வெளிப்படுத்தும் விதமாக சாம்சன் பிறந்தார். (நீ.த.13: 2-3). செக்கரியாவின் மனைவி எலிசபெத் மிகவும் முதிர்ந்த வயதில் மலடியாய் இருந்தபோது, கடவுளின் அருள்வாக்கினால் இயேசுவின் முன்னோடி, இதோ "இறைவனின் செம்மறி" என இயேசுவை சுட்டிக்காட்டிய திருமுழுக்கு யோவானை பெற்றெடுத்தார். (லூக். 1: 3-16). இவர்கள் பிறப்புகள் எல்லாவற்றையும் மிஞ்சும் விதமாக சுவக்கீன் அன்னம்மாள் தம்பதியர்களின் முதிர்ந்த வயதில் குழந்தை இல்லா குறையை நீக்க செல்வமாக, அருமை மகளாக அன்னை மரியை கடவுள் பிறக்கச் செய்தார்.

சுவக்கீன் - அன்னம்மாள், யார் இவர்கள்? கலிலேயாவின் நாசரேத்தூரில் இளமை முதலே தாழ்ச்சியிலும், பக்தியிலும், கற்பிலும், இறையன்பிலும், பிறரன்பிலும் சிறந்தவர்களாக வாழ்ந்து வந்தவர்கள். நல்ல வாழ்க்கைத் துணை அமையவேண்டி அனுதினமும் இடவிடாது நம்பிக்கையோடு செபித்து வந்தவர்கள். இறைவன் அவ்விருவரையும் அன்பில் இணைத்தார், அருளில் நிறைத்தார். மணவாழ்வில் இணைந்து இறைத் தொண்டில் ஈடுபட்டுவந்த இத்தம்பதியருக்கு முதிர்ந்த வயது வரைக்கும் குழந்தைப்பேறு இல்லாது வருந்தினர். இறைவன் நமக்கு குழந்தைச் செல்வத்தை தரசித்தமானால் அக்குழந்தையை இறைவனில் தேவாலய பணிக்கு அர்ப்பணிப்பதாக வேண்டிக்கொண்டனர். ஏனெனில் யூத மரபுபடி குழந்தைபேறு இல்லாதவர்கள் சபிக்கப்பட்டவர்களாகவும், மெசியா வழங்கும் நலனில் பங்குப் பெற தகுதியற்றவர்களாகவும் கருதப்பட்டனர். எனவே இத்தம்பதியினரின் உறவினர்கள் மற்றும் ஊர்மக்களின் விமர்சனத்திற்கு ஆளானார்கள். இத்தகைய தருணத்தில், இறைவிசுவாசத்தில் தங்களை தளராது இணைத்துக் கொண்ட அந்த தெய்வீகத் தம்பதியரின் வேண்டுதலுக்கு இறைவன் செவிசாய்த்தார், மனம் இரங்கினார். அவர்களை அருளால் நிறைத்து குழந்தை பேற்றை கொடுத்தார். அன்னை அற்புதக் குழந்தையாக பிறந்தார். அந்த அற்புதக் குழந்தைதான் அன்னைமரியா. அன்னா இறைவனுக்கு கொடுத்த வாக்குறுதியின்படி மூன்று வயதில் மரியா கோவிலுக்கு கொண்டுவரப்பட்டு ஆண்டவரின் பணிக்கு அர்ப்பணிக்கப்பட்டார். சாலமோன் காலத்திலிருந்தே

"கன்னியர்" கோவிலில் வளர்க்கப்பட்டு, வயது வந்தபோது திருமணம் செய்து வைக்கப்படுவது வழக்கமாயிருந்தது.

ஆம். சுவக்கீன் அன்னம்மாள் புண்ணிய தம்பதியினர் இறைச் சித்தத்தின்படி வாழ்ந்ததால் தான், கடவுள் அவர்களை தேர்ந்துகொண்டு, அவர்களின் மூலம் தம் மகனின் தாயை - மரியாவை பிறக்கச் செய்தார். மரியாவும் தம் பெற்றோரின் வாழ்வுதான் தனக்கு மாதிரி, அடிப்படை ஆதாரம் என ஏற்று இறை குணங்களாம் அன்பு, இரக்கம், பரிவு, கனிவு, தாழ்ச்சி, விட்டுக் கொடுக்கும் மனம், தாராளகுணம், மன்னிக்கும் மனம் என்ற அனைத்தையும் அவர்களிடமிருந்து தெரிந்துகொண்டு, புரிந்துகொண்டு, கற்றுக் கொண்டு வாழ ஆரம்பித்தார். பொறுப்புடன் கூடிய நல்வாழ்வு வாழ முயற்சி செய்தார். இறையருளை அதிகமாய் பெற்றுக் கொண்டார். இருப்பவர்க்கு இன்னும் அதிகமாய் கொடுக்கப்படும் என்ற இறைவாக்கு அன்னை மரியா வாழ்வில் நிறைவேறியது.

மூன்றரை வயதில் தந்தை சுவக்கீன் அவர்களையும், 12 வயதில் தாய் அன்னம்மாள் அவர்களையும் இழந்து சொல்லொண்ணா வேதனையை மரியா அடைந்தார். அந்த சூழலிலும் "கற்பு என்ற லீலி மலரை காப்பாற்றுவதைவிட தனக்கு இன்பமென்பது ஒன்றும் இல்லை" என்று தூய வாழ்வு வாழ்ந்து வந்தார். பூப்பெய்திய மரியாவுக்கு மனம் முடிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு, யோசேப்பை துணையாக்க சக்கரியா முடிவு செய்தார். திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டபோது மரியாவுக்கு வயது 14. இதோ கடவுள் கபிரியேல் வானத்தூதரை அனுப்பி "அருள் நிறைந்தவரே வாழ்க" என்று வாழ்த்தினார். "இதோ ஆண்டவரின் அடிமை" என்று அர்ப்பணம் செய்தார். உலக வரலாற்றை மாற்றியமைத்த உன்னதமான உரையாடல், இதனால் ஒரு கன்னிப்பெண் உன்னதரின் வல்லமையால் உத்தமரின் தாயாகிறாள். ஆம்.. மாசற்ற, பாவமில்லா வாழ்வை உறுதிப்படுத்துகிறார்.

மரியா - யோசேப்பு திருமண உறவு அருளுறவாக அமைந்திருக்கிறது. தான் அறியாமலேயே தனக்கு மணஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிற மரியா கருவுற்றிருப்பதை அறிந்த யோசேப்பு அச்சிக்கலான தருணத்தை மிகவும் நேர்த்தியாக கையாளுவதில் காட்டும் பெருந்தன்மை அவரின் அன்பின் உயர்விற்கு, நம்பிக்கைக்கு அருமையான சான்று. அதுப் போன்றே "மகனே ஏன் இப்படி செய்தாய்? இதோ பார் உன் தந்தையும் நானும் மிகுந்த கவலையோடு தேடிக்கொண்டிருந்தோமே" (லூக். 2:48) என காணாமல் போன தன் மகனைக் கோயிலில் கண்டபோது கூறியதில், மரியா அவர் தம் கணவர் யோசேப்பு அவர்களை முன்நிலைப்படுத்துவது நமக்குத் தெளிவாகிறது. மரியாவிடம் துலங்கிய இந்த பிறரை முன்னிலைப்படுத்தும் பண்பு, சிக்கலான சூழ்நிலையில் யோசேப்பிடம் காணப்பட்ட பெருந்தன்மை என்பன அவர்களின் ஒருமித்த மணவாழ்விற்கான எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன. இவ்வாழ்வானது சுவக்கீன் அன்னம்மாள் அவர்களின் வாழ்வை பிரதிபலிக்கிறது.

## புனித லொயோலா இஞ்ஞாசியார் - வாழ்வு தரும் பாடம்

திரு. லூயிஸ் சகாயராஜ்

கத்தோலிக்க திருச்சபையின் திருத்தூதுப் பணியில் சிறப்பாக இடம் பெற்றவர்களுள் ஒருவர் புனித இஞ்ஞாசியார் இன்றைய ஸ்பெயின் நாட்டில் உள்ள லொயோலா கோட்டையில் 29.10.1491ல் 13வது பிள்ளையாக பிறந்தவர் இக்னேஷியஸ் என்ற இனிகோ. இவர் பிறந்து சிறிது காலத்திலேயே இவரது தயார் இறந்துவிட மரிய தெ காரின் ஏனம் பெண்மணியால் வளர்க்கப்பட்டார். இனிகோ இளம் வயதிலேயே இராணுவத்தில் சேர்ந்து பணிபுரிய ஆர்வம் கொண்டிருந்தார். அதற்கான பயிற்சிகளை மேற்கொண்டார். 18வது வயதில் ஆயுதம் ஏந்தி போரில் ஈடுபட்டனர். 26வயது வரை அவர் போர் வீரராக, அரசி பெர்டினன்ட் இஸ பெல்லாவின் அரசவையில் சிறப்பாகப் பணிபுரிந்தார். அவரது மிடுக்கான தோற்றமும், ஆடம்பர வாழ்வும், அகங்காரத் தொனியும் தனித்தன்மை மிக்கவராகக் காட்டியது. எப்போதும் வெற்றியை மட்டுமே கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தவர் எதிரிகளையும் எதிர்ப்பவரையும் கொல்லத் தயங்காதவராக இருந்தார்.

1521ல் பம்பசெனா கோட்டையை மீட்க பிரெஞ்சு படையினரோடு போரில் ஈடுபட்டிருந்தபோது அவரது காலில் ஏற்பட்ட காயத்தால் மிகவும் பாதிக்கப்பட்டார். நீண்ட நாள் சிகிச்சை பெற வேண்டியிருந்தது. இந்த மருத்துவ காலத்தில் தனிமையில் இருந்த இஞ்ஞாசியாருக்கு படிக்க சில புத்தகங்களை கொடுத்தார்கள். புனித பிரான்சிஸ் அசிசி, புனித சாமிநாதர் ஆகியோரின் வாழ்க்கை வரலாற்று நூல்களைப் படித்தார். ஆண்டவர் இயேசுவின் வாழ்க்கை வரலாறும், புனிதர்களின் தியாகம் நிறைந்த வாழ்க்கை முறைகளும் வாசிக்க வாசிக்க அவரது மனதை வருடின. குறிப்பாக கர்த்தூசியன் துறவி லூடோல்ப் எழுதிய "கிறிஸ்துவின் வரலாறு" என்ற புத்தகம் இஞ்ஞாசியாரின் மனதைத் தின்றது என்றே சொல்லலாம். உடல் காயத்துக்கு மருத்துவம் பலனளிக்கும் மனக்காயத்துக்கோ ஆண்டவரே ஆற்றுவிக்கும் அருமருந்து என்ற உண்மை அவரை ஆட்கொண்டது. இனித கிறிஸ்துவின் போர் வீரராக வாழ்ந்து சாட்சியம் பகர வேண்டுமென்ற உந்துதல் தோன்ற தன்னுடைய ஆடம்பர அகங்கார வாழ்க்கையைத் துறக்க முடிவெடுத்தார். அன்னை மரியா பாலன் இயேசுவேடு காட்சி தந்து இஞ்ஞாசியாரின் உந்துதலை உறுதிப்படுத்தினார். மொன்செராத் என்ற இடத்தில் உள்ள ஆலயத்தில் எருசலேம் செல்லும் வழியில் மரியன்னைக்கு வணக்கம் செலுத்தி ஒப்புரவு அருட்சாதனத்தில் பங்கெடுத்து மனதை பாரமின்றி லகுவாக்கினார். போர் வீரருக்குரிய உடைகளை பீடத்தில் வைத்துவிட்டு இரவு முழுவதும் செபித்தார். பார்சிலோனா செல்லும் வழியில் மன்ரசோக் குகையில் தங்கி தியானம் செய்தார். அப்போது அவர் எழுதிய "ஆன்மீகப் பயிற்சிகள்"

என்ற நூல் இன்றளவும் மனப்பக்குவ தியானத்திற்குரிய வழிகாட்டி நூலாக அமைந்துள்ளது. தான் விரும்பியவாறே புண்ணிய பூமிக்கு பயணம் மேற்கொண்டார். தனது 32வது வயதில் இறையியல் பட்டம் பெற பாரீஸ் நகரில் படித்தார். அப்போது புனித பிரான்சிஸ் சவேரியார், புனித பீட்டர் பேபர் ஆகியோரை சந்தித்து நட்பு வட்டத்தை உருவாக்கினார். 1534ல் ஆகஸ்ட் 15அன்று லொயோலாவில் உள்ள மோன்ட்மார்ட்டர் புனித பேதுரு ஆலயத்தில் பிரான்சிஸ் சேவியர், அல்போன்சா சல்மேரன், டியாகோ லயனஸ் நிக்கோலாஸ் போபாடில்லா, பீட்டர் பேபர், சிமாயோ ரோடரிக்ஸ் ஆகிய ஆறுபேறுடன் இணைந்து துறவு பணிபுரிய முடிவெடுத்தார். 43வது வயதில் முதுகலைப் பட்டம் பெற்றார்.

1539ல் இயேசு சபையை நிறுவினார். திருத்தந்தை மூன்றாம் பவுல் இயேசு சபைக்கு அங்கீகாரத்தை 1540ல் வழங்கினார். இஞ்ஞாசியாரின் பயிற்சிகள், அணுகுமுறைகள், தியான ஒழுங்குகள் ஆகியவை மிகவும் விமர்சனத்துக்குள்ளாயின. இதனால் பல்வேறு போராட்டங்களை சந்திக்க வேண்டியிருந்தது. ஆனால் அவரது தளராத வாதங்களால் போராட்டங்களை, எதிர்ப்புகளை வென்றார். இஞ்ஞாசியார் நிறுவிய இயேசு சபை திருத்தந்தையின் வலது கரமாக செயல்பட்டது மறைப்பரப்பு பணியில் தன்னிகரில்லா இடத்தைப் பிடித்தது இயேசு சபையில் பயிற்சி பெற்ற துறவிகள் போதிப்பதில் மட்டுமல்ல, சமூக மேம்பாட்டிலும் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தினர். இன்றளவும், புனித இஞ்ஞாசியாரின் நெறியில் இயேசுவின் இறையரசுக் கனவை நனவாக்கும் பணியில் மிகப் பெரிய புரட்சியை இயேசு சபை செய்து வருகின்றது. சமத்துவம், சகோதரத்துவம், இறைபராமரிப்பு ஆகியவற்றை அனைத்து தரப்பு மக்களும் புரிந்துக்கொள்ளக் கூடிய வகையில் கல்விப்பணி, ஆன்மீகப் பயிற்சிகள், எழுத்துப்பணி குருத்துவ-துறவறப் பணிகள், மறைப்பரப்புப் பணி என பல்வேறு நிலைகளில் இயேசு சபை பணியாற்றி இயேசுவின் அன்பை மக்கள் உணரச் செய்து வருகின்றது.

1556, ஜூலை 31 அன்று இறந்த இஞ்ஞாசியாருக்கு திருத்தந்தை 5ம் பவுல் 1609ம் ஆண்டு ஜூலை 27 அன்று அருளாளராகவும் 1962, மார்ச் 12 அன்று திருத்தந்தை 15ம் கிரகோரி புனிதராகவும் பட்டம் வழங்கப்பட்டது. நற்கருணை, திருச்சிலுவை ஆகியவற்றின்மீது அசையா பற்றுக்கொண்டிருந்த புனித இஞ்ஞாசியாரை பின்பற்றும் இயேசு சபையாரும் அதை தொடர்கின்றனர். புனித இஞ்ஞாசியார், சான் செபஸ்டின் மற்றும் பில்பாவோ மறைமாவட்டங்களுக்கும், பிஸ்கே. கிபுஸ்கோவா, பாஸ்கோ நாடுகளுக்கும் பிலிப்பைன்ஸ் நாட்டு இராணுவத்துக்கும் இயேசு சபைக்கும், போர்வீரர்களுக்கும், பேராசியர்களுக்கும் பாதுகாவலராகப் போற்றப்படுகிறார். "ஆன்மீகப் பயிற்சிகள்" என்ற புனித இஞ்ஞாசியாரின் மனநல தியானங்கள், செபங்கள் நிறைந்த புத்தகம் 1548ல் வெளியானது முதல் இன்றும் மிகச்சிறந்த வழிகாட்டியாகத் திகழ்கிறது.

தனது போதனையாலும் முன்மாதிரியாலும் இயேசு சபையை சிறந்த ஆன்மீக அமைப்பாக மாற்றியதால்தான் புனித இஞ்ஞாசியாரைப் பின்பற்றி புனித பிரான்சிஸ் சவேரியார் புனித பீட்டர் பேபர் மேலும் பல புனிதர்களை உருவாக்கி இயேசு சபை தன்னிகரில்லா அமைப்பாக திகழ்கிறது. கடுந்தவ முயற்சிகளால் உருவாக்கப்படும் இயேசு சபையின் துறவிகள் தங்கள் பணிகளால் திருச்சபைக்கும், சமூகத்திற்கும் மகிவும் சீரிய முறையில் தங்களது தியாகம் நிறைந்த பங்களிப்பை தந்து வருகின்றனர். அவர்களின் முயற்சிகள் வெற்றி பெறவும், பணிகள் சிறக்கவும், சமுத்துவப் பாதையில் சமூகம் சங்கமிக்கவும் நாமும் செபிப்போம். வாழ்த்துவோம்.

## திருஅவைச் செய்திகள்

திரு. சாண்டோ

### அமைதியின் திருத்தந்தையாகத் திகழ்ந்தவர் திருத்தந்தை பிரான்சிஸ்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உலக அமைதிக்காக தனது விண்ணப்பங்களையும் வேண்டுதல்களையும் இடையறாது எடுத்துரைத்தவர். போர் மற்றும் வன்முறையால் துன்புறுபவர்கள், ஏழைகள், வலுகுறைந்தவர்கள், ஒதுக்கப்பட்ட மக்களுக்காக எப்போதும் குரல் கொடுத்தவர். எடுத்துக்காட்டாக, தான் இறுதியாக வழங்கிய, 'ஊருக்கும் உலகிற்கும்' எனப் பொருள்படும் 'ஊர்பி எத் ஓர்பி' செய்தியிலும் கூட, உலக அமைதிக்காக மக்கள் அனைவரும் செபிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டவர். போரில் ஈடுபடும் நாடுகளின் தலைவர்கள் அனைவரும் போரினை விடுத்து, உரையாடல் வழிகளில் அமைதிக்கான தீர்வுகளை நாடவேண்டும் என்பதை அதிகமாக வலியுறுத்திவர். மூச்சுக்குழல் அழற்சி நோயால் பாதிக்கப்பட்டு சுவாசிக்க முடியாமலும், பேச முடியாமலும் இருந்த நிலையிலும் கூட உலக அமைதிக்காக செபிக்க மறக்காதவர். தன்னால் திருப்பயணிகளுக்குக் கருத்துக்களை எடுத்துரைக்க இயலாத நிலையிலும், கர்தினால்கள் மற்றும் ஆயர்களை தனது கருத்துக்களை எடுத்துரைக்கும்படி கூறியவர். பன்னிரண்டு ஆண்டு காலம் திருத்தந்தையாகப் பணியாற்றி திருஅவையை சீரும் சிறப்புமாக வழிநடத்தி வந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உலகக் கத்தோலிக்க இயக்கங்களுக்கு அமைதிக்கான செயல்பாடுகளை தனது வார்த்தைகள், செயல்பாடுகள், முடிவுகள் போன்றவற்றின் வழியாக எடுத்துரைத்தவர்.

### திருத்தந்தையின் "ஊர்பி எத் ஓர்பி" சிறப்புச்செய்தி

ஒவ்வோர் ஆண்டும் கிறிஸ்து பிறப்புப் பெருவிழா மற்றும் கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருவிழா என்னும் இரு முக்கிய நாள்களில், திருத்தந்தையர், வத்திக்கானின் புனித பேதுரு பெருங்கோவிலின் நடுமாடத்திலிருந்து, "ஊருக்கும் உலகிற்கும்" எனப் பொருள்படும் ஊர்பி எத் ஓர்பி (Urbi et Orbi) என்ற சிறப்புச் செய்தி, மற்றும் வாழ்த்துக்களை வழங்கி வருகின்றனர். 13-ஆம் நூற்றாண்டில் திருத்தந்தை பத்தாம்

கிரகோரி அவர்களின் தலைமைப்பணி காலத்தில் தொடங்கப்பட்ட, "ஊர்பி எத் ஓர்பி" சிறப்பு ஆசீர் வழங்கும் பழக்கமானது இன்று வரை நடைமுறையில் இருந்து வருகின்றது. அதன்படி மக்களுக்கு தனது ஊர்பி எத் ஓர்பி சிறப்புச் செய்தியை வழங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## துன்புறும் உக்ரைன் மக்களுக்காக

உயிர்த்தெழுந்த கிறிஸ்து துன்புறுத்தப்பட்ட உக்ரைனில் உயிர்ப்பின் அமைதியைக் கொடையாகப் பொழிவாராக, உயிர்ப்பின் ஒளி மேற்கு பால்கன், காங்கோ ஜனநாயகக் குடியரசு, சூடான் தென் சூடான், சஹேல், ஆப்பிரிக்காவின் கொம்பு (Horn of Africa) கிரேட் லேக்ஸ் ஆகிய பகுதிகளில் வன்முறை மற்றும் மோதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமைதியையும் ஆறுதலையும் வழங்கட்டும். பிளவுகளை உருவாக்குகின்ற, அரசியல் மற்றும் பொருளாதார விளைவுகளால் நிறைந்த தடைகளை உடைக்கவும், ஒருவருக்கொருவர் அக்கறை கொள்ளவும், நல்லிணக்க ஒற்றுமையை அதிகரிக்கவும், ஒவ்வொரு மனிதனின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை வளர்க்கவும் உயிர்ப்பின் ஒளி நம்மைத் தூண்டுகிறது. ஆயுதங்களின் சத்தமும் மரணத்தின் எதிரொலிகளும் இனி கேட்கப்படாத வாழ்க்கையில் பங்கேற்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்ற உறுதியை நம்மில் விதைக்கிறார். "இதோ! நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்" என்று கூறிய உயிர்த்த இயேசுவில் நம்மை ஒப்படைப்போம். அனைவருக்கும் உயிர்ப்பு பெருவிழா நல்வாழ்த்துக்கள்! இவ்வாறு திருத்தந்தையின் ஊர்பி எத் ஓர்பி சிறப்புச்செய்தியை பேராயர் ஜொவான்னி தியேகோ ரவெல்லி அவர்கள் எடுத்துரைத்தார்.

## இந்திய அருள்கன்னிகை உட்பட 6 பேர் புனிதர் பட்ட படிகளுக்கு ஏற்பு

விதவையானபின் ஜெப வாழ்விலும் தனிமை வாழ்விலும் தன் நாட்களைச் செலவிட்ட இறையடியார் Eliswa கார்மல் சபையின் காலணி அணியாத பெண்களுக்கான மூன்றாம் சபையை 1862ஆம் ஆண்டு ஆரம்பித்தார். இந்திய அருள்சகோதரி ஒருவர் உட்பட, 6 இறையடியார்களின் பெயர்களை புனிதர் பட்ட நிலைகளுக்கான படிகளுக்கென அங்கீகரித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். புனிதர்பட்ட படிநிலைகளுக்கான திருப்பீடத் துறையின் தலைவர் கர்தினால் மார்செல்லோ செமராரோ அவர்கள் திங்களன்று திருத்தந்தையை சந்தித்து இது குறித்த விவரங்களை சமர்ப்பித்ததைத் தொடர்ந்து, ஆறு இறையடியார்களின் புனிதர்பட்ட நிலைகளுக்கான படிநிலைகளைத் தொடர அங்கீகாரம் வழங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இந்தியாவின் கேரளாவைச் சேர்ந்த இறையடியார் Eliswa அவர்கள், 1831ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ஆம் தேதி எர்ணாகுளம் மாவட்டத்திலுள்ள Ochanthuruth என்னுமிடத்தில் நிலச்சுவான்தார் குடும்பத்தில் பிறந்து, தன் 16ஆம் வயதிலேயே Vatharu Vakayil என்பவரை

திருமணம் புரிந்து 1851ஆம் ஆண்டு ஒரு மகளைப் பெற்றபின், அதற்கு அடுத்த ஆண்டே தன் கணவரை இழந்து விதவையானார். ஜெப வாழ்விலும் தனிமை வாழ்விலும் தன் நாட்களைச் செலவிட்ட இவர், இத்தாலி நாட்டு காலணிகள் அணியாத கார்மல் சபை அருள்பணி லியோபோல்தோ பெக்காரோ என்பவரின் ஆன்மீக வழிகாட்டுதலின்படி, கார்மல் சபையின் காலணி அணியாத பெண்களுக்கான மூன்றாம் சபை என்பதை 1862ஆம் ஆண்டு ஆரம்பித்தார். இந்தியாவில் பெண்களின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்து 1913ஆம் ஆண்டு இறைவனடிச் சேர்ந்த இறையடியார் எலிஸ்வா அவர்களின் பரிந்துரையால் நிகழ்ந்த புதுமை ஒன்று ஏற்றுக் கொள்ளப்பட்டு இவரை அருளாளராக உயர்த்துவதற்கு வழிகோலியுள்ளது.

பிரேசில் நாட்டின் ஸாவோ பௌலோ நகரில் போதைப்பொருள் கடத்துவோருக்கு எதிராகப் பணியாற்றியதற்காக அவர்களால் 2001ஆம் ஆண்டு கொல்லப்பட்ட இத்தாலிய அருள்பணி Nazareno Lanciotti அவர்களின் மறைசாட்சிய மரணத்தையும் அருளாளர் பட்ட அறிவிப்புக்கென ஏற்று அங்கீகாரம் வழங்கியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். 1852ஆம் ஆண்டு பிறந்த இஸ்பானிய கட்டிடக் கலைஞர் அந்தோனி கௌதி, பர்சலோனாவின் புகழ்வாய்ந்த திருக்குடும்ப பேராலயத்தைக் கட்டும் பணியை எடுத்து நடத்தியவர். 1926ஆம் ஆண்டு சாலை விபத்தில் காயமுற்ற இவர், மருத்துவமனையில் இறுதி அருள்சாதனத்தைப் பெற்றபின், விபத்து நடந்த மூன்றாம் நாள் இறைபதம் சேர்ந்தார். புனிதர் பட்ட நிலைகளுக்கான ஆரம்ப படியான வணக்கத்துக்குரியவராக ஏற்கப்பட்டுள்ளார் இறையடியார் அந்தோனி கௌதி. இது தவிர, கைவிடப்பட்ட குழந்தைகளை பராமரிப்பதற்கென பெண்துறவு சபை ஒன்றை உருவாக்கிய பெல்ஜியம் நாட்டின் அருள்பணி Peter Joseph Triest, இத்தாலியில் இளையோரிடையே பணியாற்றிய இத்தாலிய அருள்பணி Angelo Bughetti

### 4. திருப்பீடத் தூதர்களுக்கான பயிற்சியில் திருத்தந்தையின் வழிகாட்டல்

300 ஆண்டுகளுக்கு மேலாக தூதரகப் பணிக்கென அருள்பணியாளர்களைத் தேர்ந்தெடுத்து பயிற்சி வழங்கிவரும் நிலையில், பாப்பிறைக் கல்விக்கழகத்தின் திட்டத்தில் சில வழிகாட்டல்களை புகுத்தியுள்ளார் திருத்தந்தை. உலகம் முழுவதும் உள்ள திருப்பீட தூ தரகங்களில் பணிபுரியும் திருப்பீட அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்குவது குறித்த திட்டங்களை புதுப்பித்து சிறு வழிகாட்டல் ஒன்றை வெளியிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். அரசியல் உறவுகளின் அறிவியல் பற்றி எடுத்துரைக்கும் இந்த புதிய வழிகாட்டுதல் அறிக்கை, சட்டம், வரலாறு, அரசியல், பொருளாதாரம், அனைத்துலக உறவுகளில் பயன்படுத்தப்படும் மொழிகள் போன்ற துறைகளில் பயிற்சி குறித்தும் எடுத்துரைக்கிறது. திருப்பீடத் தலைமையகம், தலத்திரு அவைகள், திரு அவை நடவடிக்கைகள், கலாச்சாரத்திற்கும் மனித சமூகத்திற்கும் இடையே நிலவும் உறவு,

பேச்சுவார்த்தைகளுக்கான பாதையை ஊக்குவித்தல், அமைதி மற்றும் மத விடுதலைக்கு உறுதியளித்தல் போன்றவைகளின் முக்கியத்துவம் குறித்தும் திருத்தந்தை எடுத்தியம்பியுள்ளார். இத்திருப்பீடக் கல்விக் கழகத்தின் திட்டத்தில் திருப்பீடத்தூதர்களுக்கானப் பயிற்சியில் ஓராண்டு முழுவதும் ஆசியா, ஆப்ரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்காவில் மறைப்பணி அனுபவத்தை வழங்குவது இணைக்கப்பட வேண்டும் என 2020ஆம் ஆண்டே வலியுறுத்தியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## சுடர் வாசகர் போட்டி - 123

1. அரச குடும்பத்தில் பிறந்தார்
2. சைப்பிரசுக்குச் சென்றார்
3. 1940
4. "உறவே மனிதம், புனிதம் தெய்வீகம்"
5. மறுவாழ்வு என்னும் விண்ணுலகம்
6. தந்தை கபாஸோ
7. தூய ஆவியானவர்
8. புனித ராபர்ட் பெல்லார்மின்
9. "கன்வித்தோ எக்ளெசியாஸ்டிக்கோ"
10. 1808
11. கி.பி. 1830ம் ஆண்டு கேத்தரின் லேபூரேவுக்கு
12. செஸ்லாவ் ஜோஸ்வியாக்
13. எனது நாளை நான் தொடங்கும்முன் உமது தொடுதலையும், உம்மோடு உறவாடவும்
14. கி.பி. 1050 மற்றும் கி.பி. 1150ம் ஆண்டுகளில் தோன்றியது.
15. "இரங்கற்பாட்டு செபம்"

## குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

Mrs. A. Dalsirani, Bangalore

Mr. Lourdunathan, Salem

Sr. Fatima, Tricy

## சுடர் வாசகர் போட்டி 124

1. புனித தோமினிக் தமது ஆவியை இறைவனிடம் எந்நாளில் ஒப்படைத்தார்?
2. "உங்களுக்காக நியமிக்கப்படும் ஆன்ம குருவிடம் உங்கள் கை எப்போதும் இருக்கட்டும்" கூறியது யார்?
3. பிலிப்பு யாக்கோபுவின் இறைநம்பிக்கையை எதற்கு ஒப்பிட்டுக் கூறினார்?
4. இறைவனின் திட்டப்படி 12வது திருத்தூதராகத் தேர்வானார் யார்?
5. பொதுத் தேர்தல் நடத்தும்வரை தற்காலிகத் தலைவராக இருக்கும்படி தொன் போஸ்கோ யாரைக் கேட்டுக்கொண்டார்?
6. இறைவல்லமையால் இயலாததைக்கூட இறைவனிடம் பெற்றுத்தரும் வரம் பெற்றவர் யார்?
7. சிறை வாழ்க்கையிலிருந்து விடுதலைப் பெற்ற திருத்தந்தை யார்?
8. ஒவ்வொரு சொல்லிற்கும் செயலிற்கும் எது தேவைப்படுகிறது?
9. ஆஸ்விட்ஸ் என்ற இடத்திலிருந்து, டக்காவு என்ற இடத்திலுள்ள சிறைச்சாலைக்கு எத்தனைக் குருக்களை தேர்ந்தெடுத்தார்கள்?
10. விண்ணுலக பாதுகாவலராக 12ம் பத்திநாதர் யாரை நியமித்தார்?
11. 1912ம் ஆண்டு போலந்து நாட்டிலுள்ள க்ராகௌ என்னும் ஊரில் பிறந்தவர் யார்?
12. விவிலிய விடுமுறைப் பள்ளியை எப்பொழுது யார் உலகறியச் செய்தனர்?
13. பர்சலோனாவின் புகழ் வாய்ந்த திருக்குடும்ப பேராலயத்தைக் கட்டும் பணியை செய்தது யார்?
14. புனித வியாகுல அன்னை திருவிழாவை எப்பொழுதுக் கொண்டாடுகின்றனர்?
15. "நீ என்னை அன்பு செய்கிறாயா?" என்று யார் யாரிடம் கேட்டார்?


### தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 200/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

தீபகம்
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
கைப்பேசி எண்: 9385201453

பெயர்: ................................
முகவரி: ................................
................................
................................
................................

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

அருளாளர் அகஸ்துஸ் சர்தோரிஸ்கி
பொதுக்காலம் 18ம் ஞாயிறு
புனித மரியாவின் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு
ஆண்டவரின் தோற்ற மாற்றம் விழா
பொதுக்காலம் 19ம் ஞாயிறு
புனித கன்னிமரியாவின் விண்ணேற்பு பெருவிழா
பொதுக்காலம் 20ம் ஞாயிறு
அரசியான புனித கன்னி மரியா நினைவு
பொதுக்காலம் 21ம் ஞாயிறு
அருளாளர் மரிய ட்ரொரங்காத்தி
அருளாளர் செப்ரீனோ நமுங்குரா
புனித மோனிக்கா
புனிதத் திருமுழுக்கு யோவானின் பாடுகள்
பொதுக்காலம் 22ம் ஞாயிறு

### பகுதி 2: நம்பிக்கையில் வளர...

மரியாவின் விண்ணேற்பும் - விடுதலையும்
அருளாளர் செப்பரீனோ நமுங்க்குரா - வாழ்வு தரும் பாடம்
புனித மோனிக்கா தந்த புனித அகுஸ்தினார்
திருஅவையின் செய்திகள்

**அன்பு நிறை வாசகர்களே!**

இம்மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை ஜூலை 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

# ஜூலை மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | செ | | தொ.நூ. 19: 15-29 | மத். 8: 23-27 |
| 2 | பு | | தொ.நூ. 21: 5, 8-20 | மத். 8: 28-34 |
| 3 | வி | **புனித தோமா இந்தியாவின் திருத்தூதர் பெருவிழா** | I. எசா. 52: 7-10<br>II. எபே. 2: 19-22 | யோவா. 20: 24-29 |
| 4 | வெ | போர்த்துக்கல் நாட்டு எலிசபெத் | தொ.நூ.23:1-4,19,24:1-8, 62-67 | மத். 9: 9:13 |
| 5 | ச | புனித அந்தோணி மரிய சக்கரியா | தொ.நூ. 27: 1-5, 15-29 | மத். 9: 14-17 |
| 6 | **ஞா** | **பொதுக்காலத்தின் 14ம் ஞாயிறு** | I. எசா. 66: 10-14<br>II. கலா. 6: 14-18 | லூக். 10: 1-12, 17-20 |
| 7 | தி | அருளாளர் மரிய ரொமேரோ மெனேசிஸ் | தொ.நூ. 28: 10-22 | மத். 9: 18-26 |
| 8 | செ | | தொ.நூ. 32: 22-32 | மத். 9: 32-38 |
| 9 | பு | புனித அகுஸ்தின் சவோ ரோங் | தொ.நூ.41: 55-57,42: 5-7,17-24 | மத். 10: 1-7 |
| 10 | வி | | தொ.நூ.44:18-21,23-29,45:1-5 | மத். 10: 7-15 |
| 11 | வெ | புனித பெனடிக்ட் | தொ.நூ. 46: 1-7, 28-30 | மத். 10: 16-23 |
| 12 | ச | | தொ.நூ.49: 29-32,50: 15-26 | மத். 10: 24-33 |
| 13 | **ஞா** | **பொதுக்காலத்தின் 15ம் ஞாயிறு** | I. இச. 30: 10-14<br>II. கொலோ. 1: 15-20 | லூக். 10: 25-37 |
| 14 | தி | | விப. 1: 8-14, 22 | மத். 10: 34-11: 1 |
| 15 | செ | புனித பொனவெந்தூர் | விப. 2: 1-15 | மத். 11: 20-24 |
| 16 | பு | கார்மேல் மலை புனித கன்னிமரியா | விப. 3: 1-6, 9-12 | மத். 11: 25-27 |
| 17 | வி | | விப. 3: 13-20 | மத். 11: 28-30 |
| 18 | வெ | | விப. 11: 10-12: 14 | மத். 12: 1-8 |
| 19 | ச | | விப. 12: 37-42 | மத். 12: 14-21 |
| 20 | **ஞா** | **பொதுக்காலத்தின் 16ம் ஞாயிறு** | I. தொ.நூ. 18: 1-10<br>II. கொலோ. 1: 24-28 | லூக். 10: 38-42 |
| 21 | தி | | விப. 14: 5-18 | மத். 12: 38-42 |
| 22 | செ | புனித மகதலா மரியா விழா | இபா. 3: 1-4 | யோவா. 20: 1, 11-18 |
| 23 | பு | புனித பிரிட்ஜித் | விப. 16: 1-5, 9-15 | மத். 13: 1-9 |
| 24 | வி | புனித ஷார்பல் மாக்லுப் | விப. 19: 1-2, 9-11, 16-20 | மத். 13: 10-17 |
| 25 | வெ | புனித யாக்கோபு, திருத்தூதர் விழா | 2கொரி. 4: 7-15 | மத். 20: 20-28 |
| 26 | ச | புனிதர்கள் சுவக்கின் அன்னா, புனித கன்னி மரியாவின் பெற்றோர் நினைவு | விப. 24: 3-8 | மத். 13: 24-30 |
| 27 | **ஞா** | **பொதுக்காலத்தின் 17ம் ஞாயிறு** | I. தொ.நூ. 18: 20-32<br>II. கொலோ. 2: 12-14 | லூக். 11: 1-13 |
| 28 | தி | புனித அல்போன்சா முட்டாத்துப்படத்து கன்னி | விப. 32: 15-24, 30-34 | மத். 13: 31-35 |
| 29 | | புனிதர்கள் மார்த்தா, மரியா லாசர் | விப. 33:7-11,34: 5-9.28 | மத். 13: 36-43 |
| 30 | | புனித பீட்டர் கிறிசோலோகுஸ் | விப. 34: 29-35 | மத். 13: 44-46 |
| 31 | | லெயோலா நகர்ப் புனித இஞ்ஞாசியார் | விப. 40: 16-21, 34-38 | மத். 13: 47-53 |

# வருந்துகிறோம்



## திருமதி. ராணி வில்சன்

இறையின் மடியில்
16-06-2025

தீபகக் குழுவின் உறுப்பினரும் எழுத்தாளருமான அன்பு சகோதரி திருமதி. **ராணி வில்சன்** அவர்களுக்கு நல்லாயன் இயேசு முடிவில்லா வாழ்வை தந்தருள வேண்டி மன்றாடுவோம்.
அவரது குடும்பத்தாருக்கு எங்களின் ஆழ்ந்த அனுதாபங்கள்.


**தீபகம் - தொன் போஸ்கோ**
**நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்விி மையம்**

வழங்கும்

## ஞாயிறு மறைக்கல்வி பாடநூல்கள்

## Sunday Catechism Textbooks

**இப்போது விற்பனையில்**




(Cycle A, B and C)
(Available in Tamil and English)

| வகுப்புகள் | For Classes : |
|---|---|
| 1 முதல் 3 வரை | 1 - 3 |
| 4 முதல் 6 வரை | 4 - 6 |
| 7 முதல் 9 வரை | 7 - 9 |
| 10 முதல் 12 வரை | 10 - 12 |

+91 9385201453 Deepagam Don Bosco




# Happy Feast of

# ST. THOMAS

## THE APOSTLE

உங்கள் அனைவருக்கும் **தீபகத்தின்** சார்பில்
சென்னை சலேசிய மாநிலத்தின் பாதுகாவலரான
**புனித தோமாவின் பெருவிழா**
நல்வாழ்த்துக்கள்.

தயாரிப்பு : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)
கணினியேற்றம் : **கபிரியேல் மேரி** அட்டைப்பட வடிவமைப்பு : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT
தயாரிப்பில் மேற்பார்வை : **சாண்டோ, ஈசாக்** அச்சிட்டோர் : **சிகா அச்சகம்,** கீழ்ப்பாக்கம், சென்னை - 10